திராவிடநாடு

13–11–60 | வார வெளியீடு | விலை 16 காசு

காணுவோம் விடுதலை!

[வெண்ணெய்வேலன்]

நாட்டுக்குச் சுதந்திரம் வந்து இன்று—ஆண்டு
நடக்குது இப்போது பதின்மூன்று
போட்டுவிட்டார்கள் திட்டம் மூன்று—தெற்கே
புகுந்தது துன்பம் ஆமை போன்று

காந்தியின் பெயரைச் சொல்லிகிட்டு—பலர்
கதரினை மேலே போட்டுகிட்டு
மீந்தது நமது என்று எண்ணி—மக்களை
மோசங்கள் செய்குருர் இந்த மண்ணில்

பனைமட்டைக் குடிசைகள் போகவில்லை—அந்தப்
பரட்டைத் தலையில் எண்ணெய் நீவ வில்லை
மனமது இன்பத்தில் சாயவில்லை—ஏழை
மாய்ந்து மடிவதும் ஓயவில்லை

அசடு வழியும் முகம் மாறவில்லை—வாழ்வில்
அமைதிபெறும் முறைகள் நேரவில்லை
புசிக்கும் உணவில் நல்ல காரமில்லை—வீட்டில்
பொலிவும் திருவும் வந்து சேரவில்லை

குழியிட்ட கண்களும் மாறவில்லை—உழைத்த
கூனது நிமிர்ந்திட வழியுமில்லை
தொழில் துறை நன்கிங்கு அமையவில்லை—வளம்
தோன்றிட இங்கொரு வகையுமில்லை

சேரி ஒழித்திடும் திட்டமதைச்—சேர்த்துச்
செய்கிருர் ஐந்தாண்டுத் திட்டத்துடன்
காரி உமிழ்கிருர் கண்டவர்கள்—இந்தக்
காங்கிரசு ஆட்சியின் சாதனையை

செந்தமிழ் நாட்டினைச் சீர்படுத்த—சிறிய
திட்டங்கள் போட்டங்கு காட்டிடிலோ
எந்தவிதம் பொருள் தருவதென்று—தில்லி
ஏய்த்து அனுப்புதிங்கு நாமமிட்டு

பட்டை நாமம் பெற்றும் பல்டியிட்டும்—அந்தப்
பதவியே மேலென எண்ணிகிட்டு
குட்டக் குட்டத்தலை குனிந்து கொண்டு—தெற்கைக்
குழியில் அமிழ்த்துருர் வெட்கமின்றி

'வடக்கெங்கே வாழுது' என்று சொல்லி—இங்கு
வாழுருர் அமைச்சர்கள் வாய்பிளந்தே
முடங்குது போயங்கே நமது பொருள்—இதை
மீட்பது என்றுதான் திராவிடனே?

நாடுமொழிகாக்க வேண்டு மெனில்—உந்தன்
நரம்பிற்கு முறுக்கேற்றி வைத்திடடா
வாடுதல் ஏனடா திராவிடனே?—எழுந்து
வா ஒன்ருய், காணுவோம் திராவிடமே!

தண்டனை கிடைத்தது!

(ஆர். வி.)

எதிர்வீட்டு மாளிகையிலேதான் அந்த அழகு தெய்வம் குடியிருக்கிறது. பத்து மணிக்குக் கடைக்குக் கிளம்பும் பொழுதுதான் எதிர்வீட்டு ஏந்திழையும் கல்லூரிக்குக் கிளம்பும். பிற்பகல் ஒரு மணிக்கு அறைக்குத் திரும்புகையில் பளபளக்கும் காரில் வந்திறங்கும் அந்த எழில்! இரவு கடை அடைத்து வீடு திரும்புகையில் மாடி வராந்தாவில் நடைபயிலும்!

அவளிடம் அழகு உண்டு; அகந்தை உண்டு; கல்வி உண்டு; கர்வம் உண்டு, பணம் உண்டு; பகட்டு உண்டு; இவைகள் அவளோடு ஒட்டிக்கொண்டது உண்டு!

திண்ணையில் நின்றுவிட்டால் போதும்! தன்னைக் கவனிப்பதாகவே எண்ணிவிடுவாள்! அப்பொழுது அவள் பார்வையில்தான் எத்தனை தெரியும் கடுமை! "பார்வையைப் பார் பார்வையை! ரொம்பத் துணிச்சல்தான்!" — பார்க்கின்ற நேரத்தில் அவள் கரும் விழிகள் கூறும் கண்டனம் இது!

ஒரு நாள் வீட்டுக்காரப் பொடியன் எதிர்வீட்டிலிருந்து ஓடிவந்தான். "தம்பி எங்கேயிருந்து..." என்று அவனை வழிமறித்தது நல்லதாய்ப்போயிற்று! இல்லாவிட்டால் இச்செய்தியைத் தெரிந்திருக்கமுடியாது!

"மாமா! எதிர்வீட்டு மலர்க்கொடி அக்கா இல்லை...! மலர்க்கொடி அக்கா! அதான் மாமா! நித்தம் நித்தம் காரிலே காலேஜிக்கு போகுமில்லை...! அந்த அக்கா உங்களைப் பத்திக் கேட்டிச்சு! நீங்க யாரு, எங்கே இருக்கிங்ன்னு! நீங்க — எதிர்வீட்டிலே குடியிருக்கிற மாமா...... காலணிக் கடையிலே மானேஜராக இருக்கிங்ன்னு சொன்னேன். அதுக்கு அந்த அக்கா முகத்தைச் சுளிச்சி 'ஓ...! செருப்புக் கடையா...!' அப்படின்னு இழுத்திச்சு! நீங்க கொடுத்த செருப்பைக்கூட அந்த அக்கா கிட்டே காட்டினேன், பிறகு என்னைப் போகச் சொல்லிவிட்டு அவுங்க அப்பாவிடம் உங்களைப்பத்தி என்னமோ சொல்லிக்கிட்டு இருந்திச்சு! அப்போ..! மலர்க்கொடி அக்காவின் அப்பா கோபமா இருந்தாரு! நான் ஓடிவந்துவிட்டேன்!" — பொடியன் மழலையிலே மொழி தந்து குழப்பிவிட்டான். விவரம் கூறவில்லை.

அவள் தன் தந்தையிடம் கூற வேண்டிய அளவுக்கு என்ன நேர்ந்துவிட்டது! அவள் அப்பா கோபப்படும்படியாக என்ன நடந்துவிட்டது. "அப்பா! எதிர்வீட்டிலே பாண்டும், ஸ்லாக்குமாகப் போகிறான் பாருங்கள், அவன் பார்வையிலே பண்பு இல்லை அப்பா! தினசரி அவன் பார்வைத் தொல்லை சகிக்க முடியவில்லை. செருப்புக்கடையில் இருப்பவனுக்கு எத்தனை திமிர் பாருங்கள்!" இப்படித்தான் அவள் தன் தந்தையிடம் கூறியிருப்பாள். பின் அவள் பார்வைக்கு வேறு என்ன பொருள் கொள்ளமுடியும்! இதைத்தவிர வேறு என்னசொல்லி இருக்கப் போகிறாள் தன் தந்தையிடம்!

கண்ணில் படும் பொருளைப் பார்க்கக்கூடாது என்பது என்ன சட்டம்? முழு நிலாவைப் பார்ப்பதில் என்ன தவறு! அழகான சிலையைக் காண்பதில் என்ன குற்றம்?

*

என்றுமில்லாமல் அந்தக் கோழி முட்டை வண்ணப் 'பியட்'கார் ஏன் இன்று கடைமுன் வந்து நிற்க வேண்டும்! எதிர்வீட்டுக்காரர்தான் அது! சந்தேகமில்லை, அவளேதான்! தந்தையோடுதான் வருகிறாள்! கடையில் வைத்தே தந்தையும் மகளுமாக மானத்தை வாங்கிவிடப்போகிறார்கள்! நேற்றுப் பொடியன் சொன்னது சரியாகப் போய்விட்டது!

அந்த அழகுசிலை எப்பொழுதாவது இங்கு வாராதா! அதன் மென்மையான பாதங்களைத் தொட்டுச் செருப்பினை அணியும் பாக்கியம் கிட்டாதா! அந்த அழகைப் பக்கம் நின்று பார்க்க முடியாதா! அதனிடம் உரையாடும் வாய்ப்பு ஏற்படாதா!—என்று ஏங்கியநேரம் எத்தனையோ! இப்பொழுதோ, ஏன் வரவேண்டும் என்ற நிலை!

"பெண்கள் என்றால் என்ன வேண்டியிருக்கிறது அப்படிப் பார்வை! மரியாதையாக நடந்துகொள்ளத் தெரியவேண்டும்" இப்படித்தான் அவள் கேட்கப் போகிறாள்!

"மிஸ்டர்! ஒழுங்காக வேலையைப் பார்த்துவிட்டுஊர்போய்ச்சேர வழி பாரும். காலித்தன வேலை எல்லாம் வேண்டாம்" — இப்படித்தான் நீட்டப்போகிறார் பெரியவர்.

அவள் காரிலிருந்து இறங்கும் கம்பீரம்தான் என்ன! அறிவும், அழகும் சேர்ந்த பெண். அவள் பார்க்கின்ற பார்வையிலேதான் எத்தனை வீவேகம்! எத்தனை சிற்றம்! எத்தனை கடுமை! எத்தனை குழைவு! வானவில் பல வண்ணங்களைக் காட்டுவதுபோல் அந்தப் பார்வையிலேதான் எத்தனைவிதங்கள்! வெளியில் நின்றுகொண்டு பார்க்கும் அந்தக்கரிய விழிகளில்தான் எத்தனை குறுகுறுப்பு! அந்தப் பார்வையை விருப்பு என்பதா! வெறுப்பு என்பதா? அல்லது பொதுநோக்கு என்பதா! மின்வெட்டுப்போன்ற அவள் பார்வையில் எதையும் புரிந்துகொள்ள முடியவில்லை!

தந்தையும், மகளுமாகச் சேர்ந்து கடைக்குள் வருகிறார்கள். அவர்கள் வருவதைப் பார்த்தால், நிச்சயம் ஏதோ கேட்கத்தான் போகிறார்கள்!

"ஹலோ......! மிஸ்டர் நீர்தான் எதிர்வீட்டில் இருப்பவரா?" இது கிழவர். எதிர்பார்க்கவில்லை— குரல் இப்படிக் கனிவாகவரும் என்று! இனிமையாக வரவேற்றுப் பதில் தந்தவுடன், நன்றியையும் பாராட்டையும் தெரிவித்துக் கொண்டார்.

"மிஸ்டர்! எனக்கு ஒரு செட் நீரே செலக்ஷன் பண்ணிவிடும். பழைய மாதிரியாக இருந்தாலும் பரவாய் இல்லை" — கிழவர் தன் வரைக்கும் சொல்லிவிட்டு நாற்காலியில் உட்கார்ந்துகொண்டார்.

(4-ம் பக்கம் பார்க்க)

தெற்கு வளர்கிறதாம்!

19] ஆண்டுச் சந்தா ரூ. 8. (13—11—60) தனிப் பிரதி 16-காசு [இதழ் 18

'வடக்கு வளருகின்றது' என்று உள்ள நிலையை நாம் புள்ளிவிவரங்களோடு எடுத்துக் காட்டினால் சிலர் வீம்புக்காகவேனும் 'இல்லை இல்லை, தெற்கும் வளருகின்றது' என்று சொல்லத் துடிக்கின்றனர். இதையும் அதையுமாக எதை எதையோ காட்டித் தாங்கள் கூறுவதை நிறுவ முயல்கின்றனர். ஆனால், உண்மைக்கும் அவர்கள் கூற்றுக்கும் எள்ளத்தனையும் தொடர்பு இல்லாத காரணத்தினால், அந்தக் கூற்றுக்கள் சிரமம் இல்லாமல் பொய்த்து விடுகின்றன. தடைகள் எத்தனை இருப்பினும் அத்தனையும் மீறி வெளிவரக்கூடியது உண்மை.

எனவேதான், ஆனந்த விகடனுக்கும் உண்மை உறைக்கிறது; உரைக்கத் தொடங்குகின்றது!

'தெற்கு வளருகின்றது' என்ற தலைப்பில் தமிழ் நாட்டில் ஆங்காங்கு உள்ள சின்னஞ்சிறு தொழிற் கூடங்களையும் பட்டியல் போட்டுக் காட்டிப் பெருமிதம் கொண்டுவருகிறது அந்த ஏடு. மாவு அரைக்கும் ஆலையிலிருந்து எல்லாமே 'அதற்கு'த் தொழில்கள் தான். வடக்கே பெரிய பெரிய ஆலைகளும் அணைகளும் வானத்தை மறைக்கும் அளவுக்குப் புகைக்கும் தொழிற்கூடங்களும் நித்த நித்தம் புத்தம் புதியவை தோன்றிய வண்ணம் உள்ளன. இது ஒரு புறம். இன்னொருபுறம் தெற்கே உள்ள சிறுதொழில்களும் தேய்ந்துவிடும் நிலைமை உருவாகின்றது. 'இந்நிலை காணீரோ' என்று நாம் எடுத்துக்காட்டினால், வேடிக்கை காட்டிடும் விகடனார் தெற்கும் வளருகிறது என்று, சிறுமியர் மணற்பாங்கில் உட்கார்ந்து கொண்டு கூடமும் மாடமும் கட்டி மகிழுவதைப் போல், இதோ ஆணி செய்யும் இடம், அதோ அதை அடிக்கும் சுத்திகளுக்குப் பிடிபோடும் மரம் வெட்டும் தொழிற்கூடம் என்று தொடர் கட்டுரை எழுதி மகிழ்கின்றது.

எனினும், உண்மை அவ்வப்போது வெளிவராமல் நிற்பது இல்லை.

"தெற்கு வளர்கிறது" என்ற தலைப்பில் எழுதப்பட்டு வரும் கட்டுரைகளில் ஒன்று 6—11—60-ல் வெளிவந்த ஆனந்தவிகடனில் இடம் பெற்றுள்ளது. அதில் உள்ள குறிப்பொன்றினை இங்கு தந்துள்ளோம்.

> "ஒருபுறம் சர்க்கார் நமது நாட்டில் உற்பத்தி பெருகவேண்டும், சிறு தொழில்கள் வளரவேண்டும் என்று ஓயாமல் கூறிக் கொண்டிருக்கிறார்கள். இன்னொருபுறம் தொழில்கள் வளர்வதற்குரிய வசதிகளைச் செய்து கொடுப்பதில் வீண் காலதாமதம் செய்து, தொழில் துறையில் ஊக்கமுடையவர்களின் உற்சாகத்தைக் குறைத்து, மனமுடையச் செய்துவிடுகிறார்கள். தென்னாட்டின் பல்வேறு தொழில்களுக்குத், தகரடின்களும், பாரல்களும் ஏராளமாகத் தேவைப்படுகின்றன. சர்க்கார் இலாகாக்களுக்கும் இரயில்வேக்களும் இத்தகைய டிரம்களும், டின்களும் நிறைய வேண்டி இருக்கின்றன. பர்மாஷெல் போன்ற எண்ணெய்க் கம்பெனிகளின் தேவையும் அதிகமாயிருக்கின்றது. ஆயினும் இத்தகைய டின்களும் பாரல்களும் வடநாட்டிலிருந்தே பெரும்பாலும் வரவழைக்கப்படுகின்றன.
>
> "தென்னாட்டின் தேவையைத் தென்னாட்டிலேயே பூர்த்திசெய்யக்கூடிய வசதியும் வாய்ப்பும் இருக்கும் போது, வடநாட்டிலிருந்து அவற்றை தருவிக்கவேண்டிய அவசியம் இல்லை அல்லவா? அவற்றை இரயிலில் ஏற்றிக்கொண்டு, வரவேண்டிய செலவையும். கஷ்டத்தையும் காலதாமதத்தையும் தவிர்க்கலாம் அல்லவா?"

என்று தெற்கை வளர்ப்பதில் அயராது பாடுபடும் அக்கட்டுரையாளர், தெற்கு எப்படித் தேய்கிறது என்பதை எடுத்துக்காட்ட, அவரையும் அறியாமல் பேனாவை ஓட்டுமளவுக்குத், தெற்கு நாளும் நாளும் தேய்ந்தவண்ணம் உள்ளது.

சிறு தொழில்கள் மட்டுமல்ல, பெரிய பெரிய பொறிகளைக்கூடத் தென்னாட்டில் — தமிழகத்தில் செய்யமுடியும் — அதற்குரிய வாய்ப்புகளும் வசதிகளும் நிறைய உள்ளன என்று மேலும் விகடனார் விளம்புகின்றார். என்றபோதிலும், தெற்கின் வளர்ச்சி வடக்கைவிட ஒன்றும் குறைவானதல்ல என்று சொல்லிக்கொள்வதில் பெருமைப்படுகிறார்கள் இங்குள்ள காங்கிரசாரும், அவர்தம் சார்பினரும்.

எனவே, வேண்டுமென்றே உண்மையை மாற்றியும், திரித்தும் கூறும் இந்தப் போக்கை நீக்கவிடுவது, நாட்டு நலனில் உண்மையான அக்கறை கொண்டுள்ள அரசுக்கு அழகாது என்பதனை இந்தச் சமயத்தில் எடுத்துக்காட்டி, இனிமேலாவது நாம் கூறுவதில் உண்மை இருக்கிறது என்பதனை உணரவும், தெற்கு வளர்கிறது என்று கூறப்படும் தவறான பிரசாரத்தைத் தடுக்கவும் ஆட்சியினர் முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம்.

2-ம் பக்கத் தொடர்ச்சி

இப்பொழுதுதான் உயிர் வந்தது. உடலிலே இருந்த நடுக்கம் நீங்கியது! உள்ளத்திலே இருந்த சுமை குறைந்தது! அவர்கள் வந்தது கண்டனம் முழங்க அல்ல! செருப்பு வாங்க! பொடியன் எதையோ சொல்லிக் குழப்பி விட்டான்!

மகளிடம் திரும்பிய கிழவர் "என்னம்மா! மலர்க்கொடி பேசாமல் நின்றால் எப்படி...வேண்டியதைக் கேளம்மா! என்னவோ பெரிதாகச் சொல்லி அழைத்துவந்தாய்......" செல்லமாக வேண்டினார் மகளிடம்.

"அப்பா! நல்ல செருப்பாகக் கொண்டுவரச் சொல்லுங்கள்" பொற்சிலை பேசியது! அவள்குரல் இனிமை ஊசி மருந்துபோல் உடலெல்லாம் பாய்ந்தது. உலகில் உள்ள மென்மை எல்லாம் ஒன்று இக் காட்சி தருபவள் பெண் என்றால் — உலகில் உள்ள இனிமை எல்லாம் ஒன்றாகி அன்பு மொழி தருபவளும் பெண்ணே! அவள் குரலில் அத்தனை இனிமை இருந்தது.

அவளிடம் சென்று "இப்படி இந்த நாற்காலியில் உட்காருகிறீர்களா?" என்று சொன்னவுடன், ஏன் அப்படிப் பார்க்கவேண்டும்! அவள்—தன் இதழ்களைக் குவித்துப் பார்க்கும் அந்தப் பார்வையில் ...ஒன்றும் புரிந்துகொள்ள முடியவில்லையே! நல்ல வேளை—நாற்காலியில் உட்கார்ந்து கொண்டாள்.

துணைச் சிப்பந்தி செருப்புப் பெட்டிகளைக் கொண்டுவந்து அவள் பாதத்தில் குவித்துவிட்டான். அவள் மலர்ப் பாதங்களைத் தொட்டுச் செருப்பினை அணியவும் தயாராகிவிட்டான். இந்த வாய்ப்பை நான் நழுவவிடுவது! இப்படி ஒரு வாய்ப்புக் கிடைக்காதா என்று எத்தனை நாள் ஏங்கியிருக்கும் என் மனம். துணைச் சிப்பந்தியிடம் 'இரண்டு கப் காபி' என்றவுடன், வெளியில் கிளம்பிவிட்டான். அவனை வெளியில் அனுப்பியவுடன் அவள் ஏன் அப்படிப் பார்க்கவேண்டும்! "அவனை வெளியில் அனுப்பிய சூழ்ச்சி புரிகிறது. அவள் வாயால் சொல்லவில்லை; இப்படி—விழியால் கேட்டாள்.

நேரம் என்றால் இப்படியா வாய்க்க வேண்டும்! நாற்காலியில் உட்கார்ந்திருந்த பெரியவர் "அம்மா! இந்த லைட் வெளிச்சம் எனக்கு ஒத்துவராது. வெளியில் காற்று ஓட்டமாக நிற்கிறேன். நீ பார்த்துக் கொண்டிரம்மா!" என்று கிழவர் வெளியில் கிளம்பினார்.

"அப்பா! நீங்கள் வெளியில் போகவேண்டாம். இங்கேயே இருங்கள். இங்குதான் காற்றாடி சுற்றுகிறதே"—அவள் வெளியில் செல்லும் தந்தையை ஏன் தடுக்க வேண்டும்!

"கேவலம் செருப்புக் கடைக்காரனிடம் என்னைத் தனியே விட்டு விட்டுப் போகிறீர்களே!"—அவள் தன் தந்தையைத் தடுத்ததின் நோக்கம் இதுதானோ!

"செருப்பு விற்றால் என்ன குறைவு! அதுக்கு இது ஒன்றும் குறைந்தது அல்ல!" அவளுக்குச் சுடச் சுடக் கூறியது என் பார்வை.

"என்னம்மா! பச்சைக் குழந்தை மாதிரி! நான் வெளியில் தானே நிற்கிறேன்!"—கிழவர் நகர்ந்தார்.

"இந்த அட்னகாலை எடுத்து விட்டு இரண்டு பாதங்களையும் தரையில் வையுங்கள்" இப்பொழுது என்ன சொல்லியாயிற்று? எதற்காக இப்படிப் பார்க்கவேண்டும்! நல்ல காலம்தான்! பாதங்கள் இரண்டும் கீழே படிந்தன!

"இது சிங்கப்பூர் சப்பள்ஸ்! உங்கள் காலுக்கு அமைச்சலாக இருக்கும்" — அவள் பாதங்களை ஏந்தியது கரம்! பாதமா அது! எத்தனை மென்மை! வெல்வெட்போல் எத்தனை குழைவு!! இலேசாக அவளது பாதங்களைச் சுட்டு விரலால் கீறிவிட்டுச் செருப்பினை மாட்டியது என்கரம்! இது அதிகப்பிரசங்கித்தனம் தானே! என்றாலும் எதிர்வீட்டுப் பெண்! பார்த்துப் பழக்கப்பட்ட உருவம்! எல்லோரிடமுமா இப்படி! இவளிடம் மட்டும்தானே!

"மிஸ்டர்!" — அவள் குரலில் ஏன் இத்தனை கடுமை! பாதங்களிலிருந்து விடுபட்டு அவளை எடை போட்டன விழிகள்! ஐயோ! பார்வையா அது! எத்தனை சீற்றம்! அவளது உப்பிய கன்னத்தில் எப்படி வந்தது சிவப்பு வண்ணம்! அவள் புரிந்துகொண்டுவிட்டாள் — இவன் குறும்பு செய்கிறான் என்று!

அவளது சீற்றத்தைச் சட்டை செய்யவில்லை. அவளது பாதங்களை மீண்டும் ஏந்தியது கரம். "இந்த அழகான பாதங்களைத் தொட்டுப் 'பாதை பூஜை' செய்யும் பாக்கியம் யாருக்கோ" எப்படித் துணிவு வந்தது இப்படிக் கேட்க! கேட்டுவிட்டு நிமிர்ந்ததுதான் தாமதம். 'பளார்!' எப்படித் துணிந்தாள் இப்படி அறைய! கடமையிலிருந்து தவறியதற்குக் கிடைத்த பரிசு! சரியான பரிசு!!

*

ஒருநாள்! மாலை நேரம். அன்று வந்த அதே கார். எதிர் வீட்டுக் கார்தான். தந்தையும் மகளுமாகத்தான் வந்தனர். அன்று இருந்த கம்பீரம், மிடுக்கு இன்று அவர்களிடம் இல்லை!

கிழவரிடம் அன்று கண்ட மகிழ்ச்சி இன்று இல்லை. பேச்சிலும் அன்று இருந்த தெளிவு இன்று இல்லை! வந்தவுடன் முதலில் கிழவர் கேட்டது இதுதான். "மிஸ்டர்! எந்த நேரத்தில் உங்கள் கடையில் நுழைந்தோமோ! செருப்பு வாங்கி ஒரு வாரம்கூட என் மகள் காலில் போட்டுப் பார்க்கவில்லை. கல்லூரியில் சோதனை செய்கிறேன என்று 'ஆசிட்டை'க் காலில் கொட்டிக் கொண்டுவிட்டாள். காலே போய் விட்டது! பார் தம்பி என் மகளின் காலை,—மகளைச் சுட்டிக் காட்டினார் கிழவர். குரல் தழ தழத்தது. மீண்டும் தொடர்ந்தார் கிழவர்.

"தம்பி! உண்மையைச் சொல்கிறேனே என்று வருத்தப்படாதே! மீண்டும் உங்கள் கடைக்கு வரவே எனக்கு இஷ்டமில்லை. என் மகள் பிடிவாதத்தால் இங்கு வந்தேன். அவள் காலிலே உள்ள வடு மறையும் படியாக நல்ல செருப்பாகப் பார்த்துக் கொடு தம்பி"—கிழவர் மூடநம்பிக்கை கலந்த தன் பேச்சை முடித்துக்கொண்டு நாற்காலியில் உட்கார்ந்துகொண்டார்.

மணமாகாதவள், பணக்காரவீட்டுப் பெண், காலிலே பழுது என்றால் பெற்றவருக்கு இருக்காதா வருத்தம்!

அவளாகவே இன்று நாற்காலியில் உட்கார்ந்துகொண்டாள். சிப்பந்தி செருப்புப் பெட்டிகளைக் கொண்டுவந்து வைத்துவிட்டு நகர்ந்துகொண்டான். அவளது பாதங்களை மீண்டும் தொடும் வாய்ப்புக் கிட்டியது!

சேலைத் தலைப்பில் மறைந்திருந்த அவள் பாதத்தை ஏந்தியது கரம். பாதமா இது! அன்று பார்த்த பாதம் எங்கே? மேல்பாதத்தில் வெள்ளை வெள்ளையாகத் தோல்

(13-ம் பக்கம் பார்க்க)



காஞ்சீபுரம்

13–11–60.

தம்பி !

இந்தக்கிழமையாகிலும் மன்னனைக் காணமுடிகிறதா இல்லையோ என்
றெண்ணி ஏக்கமடையாதே, காணலாம்! மன்னர்கள் பலர் உளர்; சிலரைக் காண
லாம்!! காணுமுன்பு இதனை எண்ணிப்பார்; முடிஅரசு முறை தீது, ஆகாது, தேவை
யற்றது என்று கூறுவது, மிகச்சுவையுள்ள, மிகஎளிதிலே எவரும் ஒப்புக்கொள்ளத்
தக்க அரசியல் தத்துவம் என்பது நிலைத்து நின்றுன பிறகும், மன்னர்களைக் காண்
பது என்றுல், ஓர் ஆவல், பரபரப்பு உணர்ச்சி, உன்போன்ருர் உள்ளங்களில்கூட
ஏற்பட்டுவிடுகிறதே, அது ஏன்? புரிகிறதா? மன்னர்கள் மமதையாளர்
களாகிவிடக்கூடும், மக்களை மந்தை என்றெண்ணி நடத்திடக்கூடும்—
அதுபோல் நடைபெற்ற நிகழ்ச்சிகள் பல உள! மக்கள் தமது குடிசை
களில் உள்ள தட்டுமுட்டுச் சாமான்களை விற்ருகிலும், மன்னன் மனை
யாட்டியின் கருத்துக்கேற்ற மரகத பணிமாலை — வாங்கப் பணம்
செலுத்தவேண்டும் என்று கூறிய முடிஅரசுகளும் இருந்திருக்கின்றன.
எனக்கு மட்டும் அவன் கிடைத்துவிட்டால், இரு கரங்கள் போதும்,
வாள் வேண்டாம், வேல் வேண்டாம், கழுத்தை நெறித்தே காதகனைக்
கொன்றுபோடுவேன்; கற்பழிக்கப்பட்ட கன்னியரின் கண்ணீரை எண்ணிக்கொண்
டால் போதும், இந்த என் கரங்கள், இரும்பினும் வலிவுடையனவாகும் — என்று
புரட்சிப்பொறி பறந்திடப் பேசிய வீரர்களை, முச்சந்தியிலே தூக்குமரம் நாட்டி,
அதிலே பிணமாக்கித் தொங்கவிட்ட மன்னர்களும இருந்திருக்கிருர்கள். எனினும்,
இன்றும், இவ்வளவு சுவையுடன் 'ஜனநாயகம்' பேசும் இந்த நாட்களிலேயும், எங்
கிருந்தாகிலும் யாரேனும் மன்னன் வருகிருர் என்றுல், பார்க்கவேண்டும் என்று
மக்களுக்கு ஆவல் பொங்குகிறது.

தலைவர்கள், நடிகர்கள், வெற்றி வீரர்கள், ஆகியோரைக் காணவும் மக்களுக்கு
ஆவல் எழத்தான் செய்கிறது; ஆனல், அந்த ஆவல் அவர்கள் தத்தமது துறை
களில், பாராட்டத்தக்க திறம் காட்டி, மக்களின மனதை ஈர்த்த பிறகே, ஏறபடுகிறது.

ஆனல், மன்னர்களைக் காணவேண்டும் என்ற ஆவலோ, அவன் மன்னன
என்பதற்காகவே ஏற்பட்டுவிடுகிறது— தரம், திறம், வெறறி, எதுவும் அவ்வளவாகத்
தேவைப்படுவதில்லை.

இந்தநிலை, பழமையை விட்டுவிடத் துணிவு இல்லாத இந்தநாட்டிலே மட்டும்
என்பதற்கில்லை; புரட்சி பூத்திட்ட சோவியத் நாட்டிலேயே, இப்போது, மன்னர்கள்

எல்லோரும் இந்நாட்டு மன்னர் [3]

ஒருவர்பின் ஒருவராகப் 'பவனி' வருகிறார்கள்; மக்கள் கண்டு மகிழ்கிறார்கள்.

என்ன எண்ணிக்கொண்டு, ஜார் மன்னனை ஒழித்துக்கட்டிய புரட்சிப் பரம்பரையினர், இந்த மன்னர்களைப் பார்க்கிறார்களோ! அப்படி அங்கு செல்லும் மன்னர்களும், சோவியத் மக்களைக் கண்டு புன்னகை புரிகிறார்களே, அதற்குத்தான் என்ன பொருளோ? யாரறிவர்!!

'மைசூர் மகாராஜா' அமெரிக்கா சென்று, காட்டு மிருகங்களைப் பற்றியும், கடவுட் கொள்கைபற்றியும் பல்கலைக் கழகங்களில் பேருரையாற்றிவிட்டு, வருகிறார்.

'மகாராஜா'வை அமெரிக்க மக்கள் மகிழ்ச்சியுடன் வரவேற்கிறார்கள். ஆனால் தங்கள் நாட்டுக்கு ஒரு 'ராஜா' வேண்டுமென்று அவர்கள் விரும்பவுமில்லை; முன்பு இங்கிலாந்து நாட்டு அரசன் ஆணைக்கு உட்பட்டு இருந்தநிலைமையைப் புரட்சிநடாத்திப் போரிட்டு ஒழித்துக்கட்டியவர்கள், அமெரிக்கர்கள்.

அமெரிக்காவில், வரவேற்பு வைபவங்களைப் பெற்று, மகாராஜா! மகாராஜா! என்று மக்களால் புகழாரம் சூட்டப்பட்டு, மகிழ்ந்திடும் மன்னர், இங்கு திரும்பிவந்ததும், 'ராஜ்யம்' பறிபோன நிலைதான் அவரை வரவேற்கிறது!

நேபாள நாட்டு மன்னர், காஷ்மீர் நாட்டு மன்னர், இவர்கள் தத்தமது நாடுகளிலே, இன்று, இந்தியப் பேரரசின் துணை தரும் வலிவின் காரணத்தால்தான், அரசாளமுடிகிறது—ஆனால் அவர்கள் 'பவனி' வரும், சோவியத்போன்ற புத்தம் புதுமுறை கண்ட நாடுகளிலே, அவர்கள், புரட்சித் தலைவர்களுடன் குலவ முடிகிறது, குடி அரசுத் தலைவருடன் கொலுவிருக்க முடிகிறது, மக்களாட்சிமட்டுமே மாண்பளிக்கும் என்ற கருத்தை நடைமுறைக்குக் கொண்டுவந்த, நாட்டுத் தலைவர்கள், இந்த மன்னர்களுடன் உரையாடி, உலக சமாதானம் குறித்தும், நேசத்தொடர்பு கொள்வது பற்றியும், பேசி, அறிக்கைவெளியிடுகிறார்கள். விந்தையாக இருக்கிறதல்லவா?

ஆப்கன் நாட்டு மன்னரும், மன்னர் பரூக்கை விரட்டி, அரசுத் தலைவராகிவிட்ட நாசரும், எழில்மிகு எகிப்தில் விருந்துண்டு மகிழ்கிறார்கள், உலகு சீர்பெற வழி காண்போம் என்று செப்புகிறார்கள்.

மைசூர், திருவனந்தபுரம், கொச்சி, புதுக்கோட்டை, போபால், ஜெய்ப்பூர், ஜோத்பூர், பவநகர், நவநகர், பாடியாலா,—இப்படியுள்ள ஐநூறுக்கு மேற்பட்ட இராஜ்யங்களை அரசாண்டு வந்தவர்களை, இந்தியப் பேரரசு வீட்டுக்கு அனுப்பிவிட்டது—எனினும் இப்போது, 'பிரிட்டிஷ் மகாராணி' இங்கு வருகிறார்கள் என்பதற்காக, என்னென்ன வகையான விருந்து வைபவங்கள் ஏற்பாடு செய்வது என்பதுபற்றித், துரைத்தனமே சுறுசுறுப்பாகிவிட்டிருக்கிறது.

மாலைபோடலாம்—ஒன்றே ஒன்று!

விருந்துவைக்கலாம்—ஆங்கில முறை உணவு!

உடனிருந்து உபசாரங்களைக் கவனித்துக்கொள்ள, இலட்சுமி மேனன் எனும் துணை அமைச்சரே, கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்.

மகாராணி, புலிவேட்டைகாண்பாராம்! மகாராணியின் மணாளன், புலியைச் சுடுவாராம்!

இருவரும் சென்று, காதற்சின்னமாம் கவின்மிகு தாஜ்மகாலைக் காண்பராம்—நிலவொளியில்!!

தம்பி! பிரிட்டிஷ் மகாராணியின் வரவேற்பு வைபவத்துக்காக, அமைச்சர்கள் வண்டுபோலச் சுறுசுறுப்பாகப் பணியாற்றுகிறார்கள் — அதிகாரிகள் பம்பரமாகச் சுழன்று வேலைசெய்துகொண்டுள்ளனர்.

இது 'குடி அரசு' கொடிகட்டி வெற்றி முழக்கமிடும் காலம் — இப்போது, உலகில் மிகப் பெரிய ஏகாதிபத்யத்தை அமைத்து, பல நாடுகளை அடிமை கொண்ட, பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் மகாராணியாருக்குக் குடி அரசு முறையை மேற்கொண்டுவிட்ட இந்தியாவில், இத்துணை சிறப்புடனும், பகட்டுடனும் வரவேற்புகள்!! பொருள் உண்டா, இதற்கு? குடிஅரசு முறையிலே, மக்களுக்கு ஐயப்பாடே ஏற்பட்டுவிடுமோ என்றுகூடச் சிலர் அச்சப்படுவர்—முடிதரித்தோர் முன், குடியாட்சித்தலைவர்கள், முகமன்கூறி நின்றிடும் 'அடக்க உணர்ச்சி'யைக் காணும்போது.

அஃதேபோல, முடிதரித்தோர், குடியாட்சித் தலைவர்களுடன் கைகுலுக்கி, கனிவு காட்டி, அவர்தம் அறிவாற்றலைப் பாராட்டிப்பேசும்போது, குடியாட்சித் தலைவர்களில், மிகமிக உறுதிபடைத்தவர்களுக்கே கூட ஒருகணம், உச்சி குளிரத்தான் செய்யும்.

குடியாட்சி முறையை மேற்கொள்ளுங்கள்; என்று முடிதரித்தோருக்கு இவர்கள்யோசனை கூறுவதில்லை, முடி அரசுதான் சாலச் சிறந்தது என்று குடியாட்சித் தலைவர்களுக்கு, மன்னர்களும் அறிவுரை கூறுவதில்லை; இருவரும் ஒருவருக்கொருவர் 'அன்புரை' கூறிக்கொள்கின்றனர்; அவனியோர்க்கு வாழும் வழி கூறுகின்றனர்.

முடிதரித்தோருக்கு உள்ள பகட்டு கண்டு, குடியாட்சித் தலைவர்கட்கு, நெஞ்சில் சபலம் தட்டுகிறதோ என்னவோ, யார் கண்டார்கள். அதுபோலவே, குடியாட்சித் தலைவரானால், மக்களின் பேரன்பு கிடைக்கிறது, என்பது கண்டு, முடிதரித்தோர், மனம், குடியாட்சி முறையை நாடுமோ, என்னவோ!

ஆனால், மக்கள் இன்றும், மன்னர்களைக் காண்பதிலே, மட்டற்ற ஆர்வம் காட்டுகிறார்கள்.

ஈரான் நாட்டு மன்னருக்கு, சின்னாட்களுக்கு முன்பு ஒரு ஆண் மகவு பிறந்தது! ஆண் குழந்தை ஈன்றெடுக்காத ஒரே காரணத்துக்காகவே, ஈரான் மன்னர், தன் இதயத்தில் இடம் பெற்ற பேரழகி சுரையா மகாராணியை, விலக்கி வைத்துவிட்டார், வேறோர் மங்கையை மணமுடித்துக்கொண்டார்; அவள் பெற்றெடுத்தாள் ஆண் மகவு! ஈரான் நாடு விழாக்கோலம் பூண்டது! மன்னனுக்கு மகன் பிறந்தான்—நாட்டுக்கு இளவரசன் பிறந்தான்—என்று குதூகலம், நாடு முழுதும்.

ஈரான் நாட்டு மன்னர், 'இளவரசனை'க் கண்டு வீட்டுத் திரும்புகையில், அவருடைய மோட்டாரைச் சூழ்ந்துகொண்டு, ஆயிரக்கணக்கான மக்கள் மகிழ்ச்சி ஆரவாரம் செய்த காட்சி படமெடுக்கப்பட்டு, குடியாட்சி பரவப் பாடுபடும் நாளிதழ்களில், முதல் பக்கத்தில் வெளியிடப்பட்டுள்ளன.

இன்றளவும், பிடிதளரவில்லை, முறை அதிகமாக மாறிவிடவில்லை, எல்லா அதிகாரமும் தமது கரத்திலேயே, வைத்துக்கொண்டு இருக்கிறார் அபிசீனிய

நாட்டு மாமன்னர், ஹெயிலி செலாசி! சென்ற கிழமை, அவர், அரசாளத் தொடங்கி, முப்பதாண்டுகள் ஆயின என்பதைக் காட்டிட ஒரு விழா நடைபெற்றது—கோலாகலமாக!

பிரான்சு நாட்டிலே, மன்னனை விரட்டிய நாளை, இன்றும் விழாவாக்கிக் கொண்டாடுகிறார்கள்.

ரஷிய நாட்டிலே இந்த நவம்பரில், ஜார் மன்னன் ஆட்சி ஒழிக்கப்பட்ட புரட்சி, விழாநாளாக்கப்பட்டுக் கொண்டாட்டம் நடக்கிறது.

அபிசீனியா நாட்டிலே, மாமன்னர், முடிதரித்து முப்பது ஆண்டுகள் ஆகின்றன என்பதால், மகிழ்ச்சியுற்று விழா கொண்டாடுகிறார்கள்.

பேரறிவாளன் என்று போற்றப்படும் சாலமன் எனும் மன்னனுக்கும், பேரழகி ஷீபா எனும் அரசிக்கும் பிறந்த மைந்தனுடைய வழி வழி வந்தவர், அபிசீனிய மாமன்னர், என்கிறார்கள்.

இவரும் இன்றுள்ள குடியாட்சித் தலைவர்களுக்கு, நல்லாட்சி நடத்தவேண்டும் என்பது குறித்தும், உலகப்போர் மூண்டிடாமல், அறநெறியுடன் நடந்துகொள்ளவேண்டும் என்பது பற்றியும் அறிவுரைகள் கூறுகிறார்.

இவ்விதமானதோர் விந்தையான நிலைமை இன்று இருந்து வருகிறது.

குடியாட்சி முறையை முடியாட்சி முறையுடன் இணைத்துக் கொண்டுள்ள நாடு, பிரிட்டன்.

முடியுடையோன் தலையை வெட்டினர், பிரிட்டனில்; முன்போர் முறை.

மற்றோர் மன்னனை நாடு கடத்தினர்!

மிகப் பழம் காலத்திலேயே, மன்னனை மாளிகைக்குள்ளே, மடக்கி அடக்கி, அவனிடம் 'உரிமைச் சாசனம்' எழுதி வாங்கினர்—இதே பிரிட்டனில்.

இதே பிரிட்டனில், மகாராணிக்குக் குழந்தை பிறக்கப்போகிறது என்று அறிவிக்கப்பட்டதும், கொட்டும் பனியைப் பொருட்படுத்தாமல், அரண்மனைக்கு எதிரே, பெருந்திரளாக மக்கள் கூடி நின்றனர்—சேதி கேட்டு மகிழ்ந்திட!

அப்படிப்பட்ட விந்தை முறைகள் நிறைந்த பிரிட்டனை, ஆண்ட ஓர் மன்னனைத்தான், நாடகப் பேராசிரியர், நானிலம் போற்றிய பகுத்தறிவாளர், பேரறிஞர் பெர்னார்ட்ஷா, 'ஆப்பிள் கார்ட்' எனும், தமது நாடக நூலொன்றிலே, படைத்துக் காட்டுகிறார்; ஆமாம், தம்பி! உண்மையாக இருந்த மன்னன் அல்ல; சமதர்மம், குடிஅரசு, பகுத்தறிவு எனும் பல தூய கருத்துக்களைக் கருவூலமாக்கித் தந்த பேரறிஞர் பெர்னார்ட்ஷாவின் கற்பனையில் தோன்றிய மன்னன்! காண்போம் வா!

*

மன்னன் அரண்மனை பெரியது! கவர்ச்சிகரமானது! மன்னனுடைய நிலைமைக்கு ஏற்றதாகத் தானே அவன் இருப்பிடம் இருத்தல் வேண்டும். நமது நாட்டிலே தம்பி! கோயில்—என்றே பெயர் தந்தனர், மன்னன் மனைக்கு.

நுழைவு வாயிலைக் கடந்துவிட்டோம்—முன்புறக் கூடம்! இங்கு உள்ள அதிகாரிகளிடம் அனுமதி பெற்றுக்கொண்டுதான் உள்ளே போகமுடியும். அவர்கள் இருவரும், மன்னனுக்குவந்த கடிதங்களைப் படித்துக்கொண்டும், இடையிடையே பேசிக்கொண்டுமிருக்கிறார்கள். என்ன செய்வது, தம்பி! கனைத்தாலும், கண் சிமிட்டினாலும், இவர்கள், தங்கள் வேலை முடிந்தாலொழிய, அல்லது என்ன காரணத்தினாலோ நம்மிடம் அக்கரை ஏற்பட்டாலொழிய, உள்ளேசெல்ல, அனுமதி அளிக்கமாட்டார்கள். எவ்வளவு நேரமாகும் என்று கேட்கிறாய்—பார்வையால்! என் பெருமூச்சுக் கூறுவது புரியவில்லையா—எவ்வளவு நேரமாகுமோ எனக்கே தெரியாது.

இதுதான் அண்ணா! முடிஅரசு முறையிலே உள்ள கொடுமை—என்று கூறுவாய்.

குடியாட்சி முறையிலே மட்டும் என்னவாம்! கண்டவர்கள், கண்ட கண்ட நேரத்திலெல்லாம், அமைச்சர் பெருமானைக் காணச்சென்றுவிடமுடியுமா? 'நந்தி பூஜை' அங்கு இல்லையா?

இராஜகோபாலாச்சாரியார் அமைச்சராக வந்த உடன், குடியாட்சி முறையின் அருமை பெருமையை உயர்த்தும் நோக்குடன், தன்னை எவரும் எந்த நேரத்திலும் வந்து பார்க்கலாம், என்று கூறினார். ஒரே கொண்டாட்டம் மக்களுக்கு! காங்கிரஸ் வட்டாரத்திலே பெரு மகிழ்ச்சி! ஆனால், என்ன நடந்தது, தெரியுமோ? தம்பி! அணிஅணியாகக் காங்கிரஸ் தலைவர்களும் தொண்டர்களும், வந்துபார்த்தபடி இருந்தனர்-வேறு வேலை பார்க்கவே நேரம் கிடைக்கவில்லை. கூப்பிய கரத்தை, மடக்க முடியவில்லை! சிரித்தமுகம்—மாறக்கூட நேரம் கிடைக்கவில்லை. கடைசியில், இது ஆகாது என்று உணர்ந்து, ஆச்சாரியார், முதலில் செய்திருந்த ஏற்பாட்டைக் கைவிட்டுவிட்டார்.

குடியாட்சியிலேயே இது என்றால், முடியாட்சியிலே, கட்டு, காவல், தடை, இவை அதிகமாகத் தானே இருந்திடும்!

அதிகாரிகள் நமதுபக்கம் திரும்பிப்பார்ப்பதாக இல்லை—தம்பி! அடுத்த கிழமை காண்போம், மன்னனை.

அண்ணன்,



கடவுளரும்—கடமையும்

கடந்த பதினைந்து நாட்களுக்கு மேலாகவே விடாமல் பெய்து கொண்டிருக்கிறதல்லவா மழை.

இது, எதனால் தெரியுமா உங்களுக்கு!

கடவுளரும் தங்கள் கடமையைச் சரிவரச் செய்து கொண்டுள்ளனர் என்பதை எடுத்துக்காட்டுகின்றதாம் இந்த மழை,

நாட்டின் தலைவர்கள், அதாவது, அரசியல் தலைவர்கள் தங்கள் கடமைகளைச் செய்வதில்லை என்பதை எடுத்துவிளக்க வந்த அன்பர் ஆச்சாரியார், கடவுளரை மேற்கோளுக்கு அழைத்துவந்து நிறுத்தி, இதோபாருங்கள் மழைபெய்வதை.

இது, "கடவுளர், தம் கடமையை நழுவாது—தவறாது செய்கின்றனர் என்பதையன்றோ காட்டுகின்றது" என்று கூறிப் பெருமிதங்கொள்கிறார்.

ஆனால், கடந்த பத்தாண்டுகளுக்கு மேலாகவே மழையில்லாத காரணத்தால் மக்கள்பட்ட அவதியை—துன்பத்தை—தொல்லையை—கொடுமையைக், கடமையில் வழுவாத கடவுளரை நம்முன் கொண்டுவந்து காட்டுவதற்குமுன் சிறிது எண்ணிப்பார்த்திருப்பாரானால், இவ்விதம் கூறியிருக்க மாட்டாரல்லவா!

அந்திக்கலம்பகம்

பொன்னி! மூக்குத்தி விஷயமாப் பேச ஆரம்பித்தா, வீண் வம்பிலேதான் வந்து முடியும்னு சொன்னயே... அதே போலத்தான் நடந்தது... உன் வாய்க்குச் சக்கரை தாண்டிம்மா போடணும்.

அதென்ன, சக்கரை நிறையக் கிடைக்குதா உங்களுக்கு; என் வாயிலே அள்ளிப்போடும் அளவுக்கு......

முன்னே இருந்தது போலவா இருக்கு? இப்ப, சக்கரை கொஞ்சம் தாராளமாக் கிடைக்குதுபோல இருக்குது. மேலும், புதுசு புதுசா சர்க்கரை ஆலைகள் ஆரம்பிக்கிறாளாமே, நம்ம நாட்டிலே...

ஆமாம்... உற்பத்தி அதிகமாத்தான் இனி இருக்கும். ஆனா, வேறே ஒரு சங்கடம் ஏற்படும்போலத் தோணுது. நம்ம நாட்டிலே இருந்து ஏராளமான அளவு சக்கரை, அமெரிக்காவுக்கு அனுப்பப்போவதாகப் பேப்பர்லே வந்திருக்குது.

அமெரிக்காவுக்கு ஏன் அனுப்பறாங்க...?

பணத்துக்காகத்தான், அமெரிக்கா, இதுவரையிலே க்யூபா என்கிற நாட்டுச் சர்க்கரையை விலை கொடுத்து வாங்கிவந்தது. இப்ப, க்யூபா நாட்டுக்கும் அமெரிக்காவுக்கும் விரோதம்...

விரோதம்னா, சண்டை வந்துவிட்டதா, என்ன? அதைச்சொல்லு பொன்னி!

சண்டை வந்துவிடுமோன்னு பலபேர் பயப்படுகிற மாதிரியாத்தான், இரண்டு நாடுகளும், வாய்ச் சண்டை போட்டுக்கொண்டிருக்கிறதாகத் தெரிகிறது......

ஆமாம் பொன்னி! சண்டை வந்து தொலைச்சா, பிறகு பூலோகமே ஒரே அடியா அழிந்துபோயிடும்னு தான், தெரியறதே; இது தெரிந்திருந்தும், ஏன், இப்படி ஒரு நாடு மற்றொரு நாட்டோடு தகராறு செய்துகொள்ளணும்?

இதைத்தான், உலகத்திலே நீதி நிலைக்கவேண்டும், சமரசம் இருக்கவேண்டும் என்று எண்ணுகிற அறிவாளிகளெல்லாம், எடுத்துச் சொல்லிக்கொண்டிருக்கிறார்களே...

சொல்லி! என்ன பிரயோஜனம்? பகை மூண்டபடி இருக்கு!

ஆனா, உலகத்தை அழிக்கக் கூடிய பெரிய போர் ஏற்படாம இருப்பதே, அந்தப் பெரிய அறிவாளிகள் அடிக்கடி எடுத்துச் சொல்லிக்கொண்டு வருகிற புத்திமதியாலேதான்.

அமெரிக்காவுக்கு, என்ன காரணத்தினாலே, க்யூபா நாட்டோடு விரோதம் ஏற்பட்டிருந்தாலும், வழக்கமா வாங்கிக்கொண்டிருந்த சர்க்கரையை ஏன் வேண்டாம்னு சொல்லணும்?

க்யூபா நாட்டுக்கு, சர்க்கரை விற்றுத்தானே, வருவாய் கிடைக்கும்; அதைத் தடுப்போம் என்ற எண்ணம்தான்...

சி. என். ஏ.

அதாவது, வயித்திலே அடிப்பது என்பார்களே, அது.

ஆமாம்! ஆனா, க்யூபா சும்மா இருக்குமா? அங்கே இருக்கிற அமெரிக்காக்காரருடைய, பாங்க், ஓட்டல், தொழிற்சாலை, தோட்டக் காடு, இதையெல்லாம், கைப்பற்றிக்கொண்டு விட்டுது...

போட்ட பணம் என்ன ஆகும்?

க்யூபா நாடு பார்த்து இஷ்டப்பட்ட தொகை கொடுக்கும்; அதைத்தான் அமெரிக்கா வாங்கிக்கொள்ள வேண்டும்.

பாரேண்டி, தைரியத்தை!

ஏன் ஏற்படாது தைரியம்? க்யூபா மேலே கைவைத்தா, நான் உன்னைச்சும்மாவிடமாட்டேன் என்கிறாரே, ரஷ்யா நாட்டுக் குருஷேவ்!

அப்படிச்சொல்லு, பிடித்தாலும் நல்ல புளியங்கிளையாப் பிடிக்கணும் என்பார்களே, அதுபோல, க்யூபா நாடு செய்து இருக்கு...

அது கிடக்கட்டும், க்யூபா சண்டை! உன்னோட, வைரமூக்குத்திச் சண்டையைச் சொல்லு...... பட்டு, வருகிறா, வக்கீல்...

நல்ல சமயத்திலேதான் வந்திருக்கறேன்போல இருக்கே! என்னமோ, சண்டை சண்டைன்னு காதிலே விழுந்தது...

பட்டு! இது, உனக்கு வேலை தருகிற சண்டை இல்லா... இது புருஷன் பெண்ஜாதிக்குள் நடக்கும் சச்சரவு...

ஐயயோ! உங்களுக்கு, விஷயமே தெரியாதா? அமெரிக்காவிலே, பாதி வக்கீல்களுக்கு, இந்தச் சண்டையாலேதான், கொழுத்த வருமானம்...

ஏண்டி பொன்னி! புருஷன் மனைவிக்குள்ளே நடைபெறுகிற சண்டையைப்பற்றி, எப்படி, கோர்ட்டிலே கூச்சமத்து எடுத்துச் சொல்லமுடியும்?

கூச்சத்தைப் பார்த்தா, பிறகு, குத்துப்பட்டுக்கொண்டு கிடக்க வேண்டியதுதான்...

பட்டு, வக்கீல் பாஷை பேசறா. பட்டு! வெளியே சொல்லாமல் இருக்கிறதாலே, வேதனை ஏற்படும். நீ சொல்கிறபடி, குத்துபட்டுக்கொண்டு கிடக்கவேண்டி ஏற்படும். ஆனா, கோர்ட்டுக்குப்போனா, மூக்கு அறுபட்டுப்போகுமே...

இதை எண்ணி எண்ணித்தான், பலபெண்கள், தங்களோட உரிமையைப் பறிகொடுத்துவிட்டு, அழுத கண்களோடு கிடக்கிறார்கள்.

பரவாயில்லையே, இனி ஜீவனாம்ச வழக்குகளுக்கெல்லாம், பட்டு, பணமே வாங்கமாட்டா...

யார்? பட்டுவா! அடே அப்பா! நிறையப் பணம் சம்பாதிக்கத்தானே, பட்டு, வக்கில் வேலைக்காகப் படித்திருக்கா...

வக்கீல்களுக்குத் தருகிற பணம் தான், அதிகம்னு உங்களுக்கு மட்டுமா, பல பேர்களுக்குத் தோன்றுகிறது. வியாபாரத்திலே கிடைக்கிற கொள்ளை உங்க கண்களுக்குத் தெரிவதில்லை.

வியாபாரம் என்கிறபோது, ஒழுங்கான கணக்குக் காட்டி, கள்ளமார்க்கட் நடத்தாமல் கட்டவேண்டிய வரிகளை எல்லாம் தவறால் கட்டிவிட்டு, நடத்தற வியாபாரம் இருக்குதே, அதைச் சொல்ல மாட்டா பட்டு! கொள்ளை இலாபத்துக்காக, மக்களைப் பட்டினிபோட்டுக் கொல்லக்கூடக் கூசாமல் நடந்துகொள்கிற, வியாபாரிகளைத்தான், பட்டு, குறிப்பிட்டிருக்கணும் ஏன், பட்டு! அப்படித்தானே?

ஆமாம்! பேப்பர்லே பார்த்திருப்பீர்களே, முப்பது நாற்பதினாயிரம் ரூபா பெறுமானமுள்ள கற்பூரத்தை சிலோனிலே இருந்து, திருட்டுத்தனமாக வரவழைத்திருக்கா, சில பேர்வழிகள். போலீசிடம் சிக்கிக் கொண்டுவிட்டார்களாம். இல்லையானா, முப்பது ஆயிரம் கற்பூரத்திலே மூணு இலட்சம் இலாபம் கிடைத்திருக்குமே.

இலாபம்னா அதற்குப் பேர்? கொள்ளைன்னு சொல்லு.

கொள்ளை தான்! ஆனா பட்டப் பகலிலே நடக்கிற கொள்ளை! சர்க்கார் பார்த்துக்கொண்டுதானே இருக்குது. ஒரு பத்துப்பேர்களையாவது பிடித்து இழுத்துக் கடுமையாத் தண்டித்து இருந்தா, மத்தவர்களுக்கு ஒரு பயமாவது ஏற்பட்டிருக்கும்.

கள்ளமார்க்கட்காரனைப் பிடிச்சா, பாகிஸ்தானிலே பயங்கரமாத் தண்டிக்கிறார்களாம்...

பாகிஸ்தானிலே, இப்பவும் இராணுவ ஆட்சிதானே...

ஆமாம்! கலகம், குழப்பம், சதி, சச்சரவு, எதுவும் தலைகாட்டறதில்லை.

தலைகாட்டினா, ஒழித்துக்கட்டிவிடுவதற்குத்தான், இராணுவம் தயாராக இருக்குது...

அதனாலேதான், பாகிஸ்தானை ஆட்சி நடத்துகிற அயூப்கான், வெளிநாடுகள் சுற்றுப்பயணம் செய்துகொண்டு இருக்கிறார்.

பாகிஸ்தானுக்கு, நேரு பண்டிதர், என்னமோ, கால்வாய் ஒப்பந்தத்திலே, ஏகமா விட்டுக்கொடுத்துவிட்டார்னு, கூட்டம் ஒண்ணு நடந்ததே......

அதுவா? அது, முஸ்லீம்களுக்கும் இந்துக்களுக்கும் பகை இருந்துகொண்டே இருக்கணும்னு, சில பேருக்கு நினைப்பு. அப்படிப் பட்டவர்களோட பேச்சு, அது, ஆனா, விஷயம் தெரிந்தவர்களெல்லாம், பல வருஷங்களாக இருந்து வந்த ஒரு தகராறு, தீர்ந்ததுகண்டு மகிழ்ச்சியாத்தான் பேசறு; பாராட்டி இருக்கா......

காஷ்மீர் தகராறு ஒண்ணு இருக்கு, தீராமல். அதிலேயும் சமரசம் ஏற்பட்டுவிட்டா நிம்மதியா இருக்கும்.

நிம்மதி மட்டுமா! கோடி கோடியாக் கொட்டிச் செலவழிக்கிறாளே, பட்டாளத்துக்கு, அது மிச்சமாகும்......

அந்தப் பணம் வேறே உருப்படியான நல்ல காரியத்துக்குப் பயன்படும். பட்டு! இது விஷயமா உன்னோட அபிப்பிராயம் என்ன?

எங்கே என் அபிப்பிராயத்தைச் சொல்ல இடம் கொடுக்கறீங்க. நான ஒரு பேச்சு ஆரம்பிச்சா, நீங்க ஆளாளுக்கு புதுசு புதுசாப் பேச்சு ஆரம்பித்துவிடறீங்க.

ஆமாம், பொன்னி! பட்டு, என்னமோ, சுவையான விஷயம் ஆரம்பித்தா, நாமதான், இளைக் கதையிலே ஈடுபட்டுவிட்டோம்.

நான் சொல்ல வந்தது, கொடுமை, இழிவு, வேதனை எல்லாம் அனுபவித்துக்கொண்டு, வாயில்லாத பூச்சிகளாகப் பெண்கள் இருக்கக்கூடாது. உரிமைக்காகப் போராடத்தான் வேணும்...

பெண்ணுரிமை! காதுக்கு இனிக்கிற விஷயமாத்தானே, ஏதோ பேச்சு வந்தது?

ஆமாம்! இப்ப ஒரு பெரிய வழக்கு, பாரிஸ் கோர்ட்டிலே நடந்து கொண்டிருக்கு. கேட்டா, ஆச்சரியமா இருக்கும், உங்களுக்கெல்லாம். கபுர்தலா என்கிற சமஸ்தான அரசர், ஒரு வெள்ளைக்காரியைக் கல்யாணம் செய்துகொண்டார்......

கொஞ்சம் இரு பட்டு! பொன்னி! நம்ம நாட்டிலே இல்லாத அழகிகளா, வெள்ளைக்கார நாட்டிலே இருக்கிறா. நம்ம ஆண்பிள்ளைகள் சீமைக்குப் போனா, ஒரு வெள்ளைக்காரியை அழைத்துக்கொண்டு வந்துவிடுகிறாளே, அதனாலே கேட்டேன். எனக்கு என்னமோடி அம்மா! வெள்ளைக்காரிகள், அழகு உள்ளவர்களா, தெரியல்லே......

உனக்குத் தெரிந்தா மட்டும் என்ன? நீ என்ன ஆண்பிள்ளையா, கபுர்தலா மகாராஜா செய்துகொண்டதுபோலக் கலியாணம் செய்துகொள்ள. கேளேன், மத்ததையும், கபுர்தலா மகாராஜா இறந்துவிட்டார், அவரோட வெள்ளைக்கார மனைவி, சீமைக்குப் போய்விட்டா. இப்ப, வழக்குத் தொடுத்திருக்கா. எதுக்குன்னு சொல்லுங்க பார்ப்பம்......

ஜீவனாம்சத்துக்குத்தான் இருக்கும்?

செச்சே! அவளுக்கு என்ன, ஜீவனாம்சப் பணம் வந்துதானா, வாழ்க்கை நடக்கணும். அவ, ஒரு கோடி ரூபாய் பெறுமானமுள்ள நகைகள், தனக்குச் சேரவேண்டுமென்று, வழக்குப் போட்டிருக்கிறா.

ஒரு கோடி ரூபாய் பெறுமானமுள்ள நகையா?

ஏன்! முந்நூறோ நானூறோ தாளும், வைர மூக்குத்தி, இதை வாங்க, நான் பட்டபாடு கொஞ்சமான்னு யோசிக்கிறயா......

செ! அது அல்ல, போ! ஒரு கோடி ரூபாய் நகைன்னா, எவ்வளவு இருக்கணும்! வைரமா வைத்து இழைத்த அங்கி இருக்குமோ? வைரமா இருந்தாக்கூட, ஒரு கோடி ரூபாயா!!

அதிலே என்ன ஆச்சரியம். இப்ப, ஒரு புது வைரம் கிடைத்து இருக்குது—விலையே நிர்ணயிக்க முடியாதாம்—அவ்வளவு மதிப்பான வைரமாம்.

எங்கே கண்டு பிடித்தார்கள் இந்த வைரம்?

ஆப்பிரிக்காவிலே. 184 காரட் எடையாம். இதை ஒரு சுரங்கத்துக் குப்பை மேட்டிலிருந்து ஆப்பிரிக்கத் தொழிலாளி ஒருவன் கண்டு எடுத்து இருக்கிறான். பத்தாயிரம் ரூபாய் பரிசு கொடுத்தார்கள், அவனுக்கு.

பாரேண்டி, அவன் அதிர்ஷ்டத்தை. இனி அவன் கூலி வேலை செய்யவே வேண்டியதில்லையே! 10 ஆயிரம் கிடைத்துவிட்டதே!

அவனுடைய அதிர்ஷ்டம் இருக்கட்டும்; அவனுடைய நாணயத்தைக் கவனி. விலை மதிக்க முடியாத வைரம் கிடைத்தது. தெரியாமல் எடுத்து வைத்துக் கொள்ளலாம் என்ற கெட்ட எண்ணம் தோன்றவில்லையே அவனுக்கு. சுரங்கத்தின் சொந்தக்காரரிடம், தானாகக் கொண்டுபோய்க் கொடுத்துவிட்டிருக்கிறான். அது அல்லவா, நாணயம்.

யார் வாங்கப் போகிறார்களோ, தெரியல்லே— அந்த வைரத்தை? கொஞ்சமான பணமா கொடுக்க வேண்டி இருக்கும் — எத்தனை இலட்சம் கேட்கிறார்களோ?

நீ எதுக்காக இப்ப பெருமூச்சு விடறே. நாமெல்லாம் யோசிக்க வேண்டிய விஷயமா, அது. உனக்கு ஏன் அந்த ஆசை?

ஆசை ஏற்படுவது சகஜம் தானே......நாமென்ன வினோ பாவா? ஆசையை அகற்றிவிட்டு, துறவிகளாகிவிட......பார்க்கப் போனா, அவருக்கும் கொள்ளை ஆசை இருக்குது—நிலம் அதிகமா வைத்துக்கொண்டு இருக்கிறவர்களிடமிருந்து நில தானம் வாங்கி, நிலம் இல்லாதவர்களுக்குத் தரவேண்டும் என்கிற ஆசை! ஆசையை அழிக்க யாராலும் முடியாது.

ஏன் முடியாது? தவசிகள், எல்லா ஆசைகளையும் அடக்கினவர்கள் அல்லவா?

தவசிகள் தானே! ஆசையை அடக்கினவர்களுக்குப் பெயர், தவசி! அதுதானே, நீ சொல்வது?

என்னடிம்மா பொன்னி! தவசிகள் விஷயத்திலேகூடத் தகராறா?

நான், ஏன் தகராறு செய்யப் போறேன்! எனக்கு ஒரே சிரிப்பு, தவசிகள் என்றால், ஆசையை அடக்கினவர்கள் என்று நீ சொன்னபோது. ஏன் தெரியுமா? விசுவாமித்திரர் கதை ஞாபகத்துக்கு வந்தது.

பட்டு! இனி, பொன்னி பேச்சை நிறுத்தமாட்டா! ஆரம்பமாகிவிடும் அவளோட சுயமரியாதைப் பிரசாரம். உம்! ஆரம்பமாகட்டும், உன் பிரசாரம்! காவி கட்டினவர்களெல்லாம், காமுகர்கள்!! அவர்களை நம்பவே கூடாது......

பொன்னி, ஒரே அடியா அப்படிச் சொல்லமுடியுமா? அவளுக்கு, தமிழ் இலக்கியம் என்றா, உயிர்னு சொல்றாளே. அப்படின்னா, இளங்கோவடிகள் தெரிந்திருக்கணுமே...

அடிகள் தெரியும், அறவோர் தெரியும், ஆன்றோர் சான்றோர் தெரியும், தமிழ் இலக்கியம் பாடம் கேட்பவர்களுக்கு; ஆனால் தவசி தெரியாது! ஏன் என்றால், தமிழ் நாட்டிலே, துறவி உண்டே தவிர, தவசி இருந்ததில்லை......

பட்டு! சட்டம்படித்திருக்கிறவ, நீ. உன்னாலே முடியுமா, சொல்லேன், இப்படி, வார்த்தைக்கு வார்த்தை அர்த்தம் வேறுன்னு சொல்லி வாதாட......

நான் வாதாடவில்லையே. தமிழகத்தில் துறவி உண்டு, தவசி கிடையாது என்கிறேன்.

துறவி வேறு, தவசிவேறா?

ஆமாம்! வாழ்க்கைச் சுகத்தை, ஆசைகளை எல்லாம் துறந்தவன், துறவி! துறவி மக்களுக்குத்தொண்டாற்றுவான்! தவசி, அப்படி அல்ல. மோட்சம் கொடுக்கச் சொல்லிக், கெஞ்சுவான், கூத்தாடுவான், கும்பிடுபோடுவான், பட்டினி கிடப்பான், பனியென்றும் வெயிலென்றும் பார்க்காமல், ஓம் நமசிவாயா என்றோ, விட்டலா! விட்டலா!-என்றோ பஜித்துக்கொண்டு கிடப்பான். இளங்கோவடிகள், துறவி! அவர்தான், இறவாத புகழ் பெற்றிருக்கும், சிலப்பதிகாரம் எனும் அருமையான காப்பியத்தை இயற்றினார்......

விசுவாமித்திரர், என்ன நூல் எழுதினார்? அவர் பேராலே, என்ன இலக்கியம் இருக்குது. என்று கேட்கிறா, பொன்னி!

பதில் சொல்லவேண்டிய பொறுப்பும், பொன்னிக்குத்தான்.

நானா! நான் ஏதாவது சொன்னா' உடனே, சமயத்தைக் கவனித்து, சுயமரியாதைப் பிரசாரம் செய்கிறா பொன்னி, என்று கலகப்பேச்சுப் பேசுவீர்கள்.........உம்! போங்க, எனக்கு என்ன அதனாலே, கஷ்டமா நஷ்டமா? துறவி இளங்கோ அடிகள், உலகத்துக்கு, சிலப்பதிகாரம் கொடுத்தார்; விசுவாமித்திரர் சகுந்தலையைக் கொடுத்தார், தவசி அல்லவா? அதனால்!!

போடி குறும்புக்காரி! தவசிகளிலே, தகாத செயலைச் செய்யாதவர்களே, கிடையாதா?

சொன்னேனா அப்படி? இல்லையே! தவசி என்பதற்கு உள்ள இலக்கணம் வேறு, துறவி என்று சொன்னால், அதற்கு இருக்கிற பொருளே, வேறே.

பட்டு! பொன்னி இப்படித்தான் — காவி கமண்டலம், நீறுபூச்சு— தேர் திருவிழா! இதை எல்லாம், பலமாக் கண்டித்துப்பேசுவா, மளமளன்னு, விறுவிறுப்பா...

வீட்டுக்காரர், செல்லம்கொடுத்துக்கொடுத்து, பொன்னியை அப்படி ஆக்கிவிட்டிருக்கிறார்.

பொன்னியோட வீட்டுக்காரரையா, சொல்றே? அடே அப்பா! ஒரு காலத்திலே, சிவப்பழமா இருந்தார். பிறகு சுயமரியாதை இயக்கத்திலே சேர்ந்தார் — அதனாலேதான், அவருக்குப் பணிவிடைசெய்யப் பலரும் காத்துக்கொண்டு இருக்கிறார்கள்...

ஆமா, பொன்னி, அவளுடைய வீட்டுக்காரரோடு சேர்ந்து வெளியூர்களெல்லாம்கூடப் போகிறாளா, பிரசாரம் செய்ய...?

அது தெரியாதா, உனக்கு? மகாநாடு கூட்டுவா, அவா, கட்சியிலே, அப்ப பார்க்கணுமே, பொன்னியை!

ஏகமாப் பேசுவாபோல இருக்கு, மகாநாட்டிலே.

ஐயோ! பாவமே!

வடக்கு வாழ்கிறது; தெற்கு தேய்கிறது—என்று நாம் சொன்னோம்—காங்கிரசார், இது அடுக்கு மொழி—அர்த்தமில்லை என்றனர்.

*

வடக்கு வாழ்கிறது; தெற்கு தேய்கிறது—என்று பொருளாதார நிபுணர்கள் எடுத்துக்காட்டினர்—காங்கிரசாரின் முகத்திலே அசடு வழியலாயிற்று.

*

வடக்கு வாழ்கிறது; தெற்கு தேய்கிறது—என்று காங்கிரஸ் அமைச்சர்களே, 'ஜாடை மாடை'யாகப் பேசலாயினர்—காங்கிரசாரின் முகம் கருத்தது.

*

வடக்கு வாழ்கிறது; தெற்கு தேய்கிறது என்று, தென்னகத்து, சென்னை, ஆந்திரம், கேரளம், கருநாடகம் ஆகிய மாநிலங்களிலே உள்ள கவர்னர்கள், நேரு எதிரிலே, கவர்னர்கள் மாநாட்டிலே எடுத்துக்காட்டி உள்ளனர்!

*

மூக்கறுக்கிறார்களே இந்தக் கவர்னர்கள்—தி. மு. க. வுடன் சேர்ந்து விட்டார்களோ இந்தப் பாவிகள் — என்று முணு முணுக்கிறார்கள், காங்கிரசார்.

பேசமட்டுமா பேசுவா, மகாநாட்டுக்கு. எல்லா வேலையையும், அவதான் கவனிப்பா. பணம் வசூலிக்கிற வேலையிலே இருந்து, பந்தி விசாரிக்கிற வரையிலே, பொன்னிதான்!

அப்படியா! அப்படின்னா, அவர்களுடைய கட்சியிலே, பொன்னிக்கு, நிறையச் செல்வாக்குன்னு சொல்லு...

போதுமே, கேலி! பட்டு! மகாநாட்டு வேலையோ, மற்ற எந்த வேலையோ, எதுவா இருந்தாலும், அவர் வேலைசெய்யும்போது, பார்த்துக்கொண்டு, சும்மா இருக்க முடியுமா? கூடமாட வேலை செய்ய வேண்டாமா......

ஆமாமாம்! அப்படி வேலை செய்தாத்தான், உலகமே பாராட்டும். இப்பக்கூட, அமெரிக்காவிலே, தலைவர் ஆகி இருக்கருரே கென்னடி; அவருக்குத் தேர்தல் பிரசாரத்தைப் பெண்கள்தான் அதிகமான அளவு செய்ததாகப் பேப்பரிலே வந்திருக்குது.

இருக்கலாம். ஆனா, பட்டு! அமெரிக்காவிலே தலைவராகி இருக்கிருரே, கென்னடி, அவருடைய மனைவி எங்கேயும் போய்ப் பேசினதாக, ஓட்டு கேட்டதாகத் தெரியவில்லையே......

கென்னடியோட மனைவி, நிறை கர்ப்பிணியாச்சே! அடுத்த மாதம், குழந்தை!! அந்த நிலையிலே, அவ, ஊரூர் அலைந்து, எலக்ஷன் வேலையைப் பார்க்கமுடியுமா? அதனாலேதான், அவ, எலக்ஷன்வேலை செய்யப்போகல்லே. கென்னடியோட போட்டி போட்டுத் தோற்றுப்போனாரே, நிக்சன் அவருடன் சேர்ந்து அவருடைய மனைவி, தேர்தல் வேலைகளைச் செய்தான்னு பேப்பர்லே இருக்குதே......பாடுபட்டும் பலன் இல்லை......புருஷன் தோற்றுப்போயிட்டார்னு கேள்விப்பட்டதும், அவ, விக்கி விக்கி அழுதாளாம்......

ஐயோ, பாவம்! அவளுக்கு மனக்கஷ்டமாத்தான் இருக்கும். ஆனா என்ன செய்வது? எலக்ஷன்னு ஏற்பட்டுவிட்டா, யாராவது ஒருத்தர் ஜெயிப்பார், மற்றவர் தோற்றுப் போவார்! அதுதான், முறை.

முறை அதுதான், ஆனா, தோல்வின்னு தெரிந்ததும், துக்கம் துளைக்காமல் எப்படி இருக்கமுடியும்?

எலக்ஷன் விஷயமா, வெற்றி தோல்வி என்கிறது சகஜம். இதற்காக, யாராவது சங்கடப்படுவார்களா?

உனக்கு என்னடிம்மா, தாராளமாப் பேசுவே—வெற்றி தோல்வியைப்பற்றிக்கவலையே, படமாட்டே.

தெரியுமா, உங்களுக்கு, எங்க கழகத்திலே, இருக்கிருரே, நாவலர் நெடுஞ்செழியன். அவர், தோல்வியைத் தோல்வி என்றே சொல்ல மாட்டார், வெற்றிக்கு வாய்ப்பு இழந்தவர்கள்! என்றுதான் சொல்வார்.

பாரேன், வேடிக்கையை...!

வேடிக்கையா? செச்சே! நாவலர் நெடுஞ்செழியன், வீண்பகட்டு, வெற்றுவேட்டு, முதலியன கூடாது என்று கருதுபவர். வெற்றிக்கு வாய்ப்பு இழந்தவர் என்று பேசுவதற்கு, பொருள் சொல்ல ஆரம்பித்தா, அரைமணி நேரமாவது, மணிமணியாப் பேசுவார்......

பொன்னி! அமெரிக்காவிலே, ஆண்களைவிடப் பெண்கள்தான், அதிகம்; ஓட்டுப்பலம், பெண்களிடம்தானாமே......?

அப்படியா? புதுச்சேரி காரைக்கால் போன்ற பகுதிகளிலும் நிலைமை அதுபோலத்தானாம்.

எண்ணிக்கை பலம் மட்டும் போதுமா?

போதாது! ஆனால், அதுகூட இல்லாமல் இருந்தால், இன்னும், தொல்லைதானே......... பெண்கள் நிறைய இருக்கிருர்கள், ஓட்டுடன், என்று தெரிவதாலேதான், பெண்கள் உரிமைக்காக ஒப்புக்காகிலும், ஆடவர்கள், வாதாடுகிருர்கள்......

உரிமை உரிமை என்று கேட்டுக்கொண்டு இருப்பதாலே மட்டும், ஒரு உயர்வும் வந்துவிடாது. உரிமைவேண்டும் என்று கேட்கிற போதே, நமக்கு, கடமையைப் பற்றிய எண்ணம், மேலே வந்து நிற்கவேண்டும்.

ஆமாம்—ஆனால், கடமை என்ருல், கல்லானாலும் கணவன், புல்லானாலும் புருஷன் என்பார்களே, அதுபோல அல்ல. கணவனுடைய இயல்பு அறிந்து, நடந்துகொள்ள வேண்டும்—ஆனா, அடிமையாகிக் கிடக்கக்கூடாது. இதைத்தான், நாங்க, எங்கள் இயக்கத்திலே, வாழ்க்கைத் துணை ஒப்பந்தம் என்று சொல்கிருேம்.

கேட்டுக்கடி, பட்டு! நீ எத்தனை சட்டப்புத்தகம் படித்தாலும் தெரிந்துகொள்ள முடியாது—பொன்னியோடு பேசினா, போதும், சகலமும் தெரிந்துகொள்ளலாம்...

ஒரு விஷயம் தெரியுமோ, உங்களுக்கெல்லாம்—இரகசியம்னுகூடச் சொல்லலாம்......

சொல்லேண்டி...... முன்னுரையைக் குறைச்சி...... நீ நாளைக்குக் கோர்ட்டிலே போகிறபோது, வக்கீல் எல்லாம் வைத்துக்கொள்ளு — பணம் கிடைக்கும். இப்ப, சுருக்கமா, விஷயத்தைச் சொல்லு.

பட்டு, விஷயத்தை வளர்த்திப் பேசருன்னு சொல்லி, அதைத் தடுக்க, நீ, இப்ப, இவ்வளவு பேசணுமா! நீ, சொல்லு, பட்டு! விளக்கமாச்சொன்னாத்தானே, விஷயம் புரியும், என்பதாலே, பட்டு, அப்படிப் பேசரு......சொல்லு, பட்டு! என்ன இரகசியம்?

நம்ம ஜவார்லால் இருக்காரே....

அதென்னடிம்மா, நம்ம ஜவார்லால்னு, சொந்தம் கொண்டாடிறே...... அவரோடு, பழகின மாதிரி......

நான் பேசி இருக்கறேனே, அவரோடு......பூனாவிலே

பூனா எங்கே, போனே? எப்பப் போயிருந்தே?

அடடா! நான் பூனான்னு சொன்னதும், நீ, நான் பூனா என்கிற ஊருக்கே போனதாக எண்ணிக்கொண்டயா? நான் சொன்னது பூனா—இங்கிலீஷில் P.O.O.N.A. என்பது......

ஊர் பேர்தானே, அது?

ஊர் பேர் இல்லா! அது ஒரு சங்கத்துடைய பெயர்?

ஓஹோ! நாட்டோ, சியாட்டோ, என்றெல்லாம் சொல்கிருர்களே, அதுபோலவா?

அதென்னடி பொன்னி! பட்டு, பூனா என்கிரு, நீ, நாட்டோ பாட்டோன்னு அடுக்கிண்டே, போறே.

போகல்லே...... இங்கேயேதான் இருக்கறேன். இப்ப, ஐ.நா.ன்னு தெரியுது, புரியுது இல்லையா......

ஆமாம்! அடிக்கொரு தடவை பேப்பர்லே வருது...ஐக்கியநாடுகள் சபை, என்பது......

ஐக்கியநாடுகள் சபை என்பதைச் சுருக்கி, ஐ நா ன்னு சொல்லலியா, அதுபோலத்தான, நாட்டோ, சியாட்டோ, என்பதெல்லாம். நம்ம பட்டு சொல்கிற பூனா என்பதும், அதுபோலத்தான் இருக்கும். என் பட்டு! அதுதானே!

சரிக்! P. O. O N. A. பூனா—Peoples' Organisation Orbit

New Asia—அதாவது புதிய ஆசியாவிலே உள்ள மக்கள் மன்றம்—P. O. O. N. A. பூனா!

போதும்டியம்மா, தலை சுத்தறது, உன்னோட பூனாவும் அதற்கு நீ கொடுக்கற வியாக்யானமும். போகட்டும் அந்தப் பூனாவிலே, நேரு எங்கே வந்தார்?

பைத்யமே! பைத்யமே! நேரு ஏன், இங்கே வரப்போறார்! பூனாவிலே, ஒரு தடவை, குட்டி நாடகம் ஒன்று போட்டோம். என் கல்லூரி ஆசிரியர், கமலா, நேரு வேஷம்! நான், இந்திராகாந்தி!! அப்பப் பேசினதைச் சொன்னேன், வேடிக்கையாக!

நல்லா இருக்குது, உன் வேடிக்கை! பூனாவும் நானாவும்...

நானா என்று ஒரு புத்தகம் இருக்குது, தெரியுமோ...

எமிலிஜோலா எழுதியதுதானே!

பரவாயில்லயே, பொன்னிக்கு, எமிலிஜோலா,தெரிந்திருக்குதே... ஆமாம், நீ, ஏன் முகத்தைத் தொங்கப்போட்டுக் கொண்டிருக்கறே... நாம், இதை எல்லாம், படிக்கலியே ...பட்டுவும் பொன்னியும் பேசிக்கொண்டிருக்கும்போது, நாம் ஊமைபோல இருக்கவேண்டி நேரிடுதேன்னு வெட்கமா...

அடச்சீ! சும்மாவிடு! பெரிய படிப்புப் படித்தவதான் நீ. இந்திரா காந்தி பேரைச் சொன்னவுடனே, எனக்கு மனம் சங்கடமாயிடுத்து. பாவம்! அவளுக்கு எப்படிப்பட்ட விபத்து வந்தது பார்த்தயா...

ஆமாம், பாவம்! பிரோஸ் காந்தி மரணமடைந்தது; இந்திராவுக்குப் பலமான அடிதான் பாவம்.

எப்படித் தாங்கிக்கொள்ள முடியும்? பிரோஸ் காந்திக்கும் இந்திராவுக்கும், காதல் கல்யாணம் நடந்ததுன்னு, ஊரே கொண்டாடினாங்களே...

காதல் கல்யாணம், மட்டுமா? கலப்புக் கல்யாணம்......

ஆமாம்! இன்பமாக வாழ, எல்லாம் இருக்குது......

கண் நிறைந்த கணவன், காதல் நிரம்பிய வாழ்க்கை...துடைத்துக்கொள்ளக்கூடிய துக்கமா, அது? இப்ப என்ன செய்துகொண்டிருக்குது, இந்திரா?

மெக்சிகோ நாட்டிலே சுற்றுப் பயணம் செய்துகொண்டிருக்கிறாங்க...

இப்ப, அங்கே இல்லே, பட்டு! மெக்சிகோவிலே இருந்து புறப்பட்டு, நியூயார்க் வந்து, எலக்ஷன் நடந்ததே, அதைப் பார்த்ததாகச், செய்தி வந்திருக்குது...

பொன்னி! யாரைப்பத்திப் பேசறிங்க, — மெக்சிகோ போனாங்க, நியூயார்க் வந்தாங்கன்னு...

இந்திரா காந்தியைப்பத்தித்தான்.

என்னது! புருஷன் மறைஞ்சி ஒரு வருஷம்கூட ஆகல்லே...... அதுக்குள்ளே...

வருஷமா! ஒரு மாதம் ஆனதும், இந்திரா காந்தி மெக்சிகோ புறப்பட்டாச்சே!

என்னடி அக்ரமமா, இருக்குதே! புருஷனைப் பறிகொடுத்துவிட்டது, பதறப் பதற! திடீர்னு, மாரடைப்பிலே, செத்துவிட்டதாகச் சொன்னாங்க...

ஆமாம் — அழுதாச்சி — விம்மியாச்சி—விக்கியாச்சி—அதையேவா தொடர்ந்து செய்துகொண்டிருக்க முடியும்?

அதுக்காக, புருஷன் இறந்த துக்கத்தைக்கூடத் தாங்கிக்கொண்டு, அமெரிக்கா போகறதா! அப்படி என்ன அங்கே தலைபோகிற காரியம், குடிமுழுகிப்போற அவசரம்...

பெரிய இடத்து விஷயம்—அப்படித்தான் இருக்கும். புருஷன் போயாச்சி. புலம்பினாலும், புரண்டு அழுதாலும், மாண்டார் வருவரோ...

அது தெரியும்டி......திண்ணைப் பள்ளிக்கூடத்துப் பசங்களுக்குக் கூட!! ஆனா, மஞ்சள் போச்சி,குங்குமம் போச்சி, பூ போச்சி, தாலி போச்சி—நமக்கு நினைச்சாலே, கட்டிப்பிடிச்சிண்டி அழலாமான்னு தோணுது, இந்த இந்திராகாந்தி, புருஷனைப் பதறப்பதறப் பறிகொடுத்துவிட்டு, அமெரிக்கா போயிருக்கிறது — சே — எனக்கு அது மனஷத்தனமாகவே தோணவில்லே. ஆயிரம் காரணம் காட்டினாலும், இந்திராகாந்தி செய்தது, அக்ரமம், அக்ரமம்னு, நான், எந்த மேடை ஏறிவேண்டுமானாலும், சொல்லத்தயார்.........

பட்டு! பார்த்தயா, தைரியத்தை! முதன்மந்திரியுடைய ஒரே மகள், இந்திராகாந்தி! இந்திராவுடைய போக்கை, மேடை ஏறிக் கண்டிக்கலாம் என்கிற அளவு, தைரியம் வந்துவிட்டிருக்கிறதே.......

நல்லதைச் சொல்ல, ஏன் நடுங்கணும்? நான் நேரிலேயே இந்திரா காந்தியைப் பார்த்தாக்கூடக் கேட்பேனே. எனக்கு என்ன பயம்? இது சரியாம்மா! உன் புருஷன் செத்து, ஒரு மாசம் ஆகறதுக்குள்ளே, இப்படியா, மனசைக் கல்லாக்கிக்கொண்டு, அமெரிக்கா போறது? என்னமோ, உங்க அப்பாகூட அடிக்கடி, பாரதப் பண்பாடு பாரதப்பண்பாடுன்னு பேசுவார்—பேப்பர்லே பார்த்திருக்கறேன், அந்தப் பண்பாடு இதுதானா? என்று கேட்கறேன்...... பயம் என்ன எனக்கு.

இந்திராகாந்தியைக் கண்டுபேசறது பிறகு பார்த்துக்கொள்ளலாம், நம்ம பூனாவிலே, வந்து பேசேன் ஒரு நாளைக்கு, இதே விஷயத்தை, பொன்னி தலைமை வகிக்கட்டும்,...

என்னைத்தானே வந்து பேசச் சொல்றே. எனக்கு ஏதடிம்மா, இதுக்கெல்லாம், நேரம்? உங்களாட்டமா! வேலைகள் குவிந்து இடக்குது, மலைமலையா......

ஏன், காரணமில்லாமப் பொய் பேசறிங்க...?

பட்டு! உன் பேச்சிலே, பின் பகுதியை ஒப்புக்கொள்கிறேன், முன் பகுதியை மறுக்கிறேன்—பேசினது பொய்! ஆனால், காரணம் இல்லாமல், அல்ல!

ஏண்டி பொன்னி! என்ன நீயும் அந்த வாயாடி வக்கீல் பொண்ணோடு சேர்ந்துண்டு, வம்பும் தும்பும் பேசறே......

வம்புமில்லே, தும்பும் இல்லை, நீங்க, இப்ப எங்களை எழுந்து போகச் சொல்லிவிட்டு, எங்கே போகப் போறிங்க, என்பது தெரியும், எனக்கு.

ஜோதிடம்கூடத் தெரியுமா, உனக்கு......

எனக்கு ஜோதிடம் தெரிந்தா, நானே சொல்லிவிடமாட்டேனா, பாலாய் பாங்க் பணம் உங்களுக்குத் திரும்பக் கிடைக்குமா, கிடைக்காதா என்பதை. பட்டு எழுந்திரு, எழுந்திரு! மலையாள மாந்திரீக ஜோதிடாலயம், போகப் போகிறீர்கள். அதோ, மோட்டார் சத்தம் வருகிறது. வருகிறோம்.

★

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

4-ம் பக்கத் தொடர்ச்சி

உரிந்து வடுவாகி இருந்தது. காலில் இருந்த சின்ன விரல்கள் வெட்டப்பட்டிருந்தன. பார்க்க ஒருவித பயங்கரம். ஒருவித அருவருப்பு! கைக்குட்டையால் அவள் பாதத்தைத் துடைத்துவிட்டு, செருப்பை மாட்டுவதற்குள் அவள் விழியிலிருந்து கொட்டிய கண்ணீர்த்துளி என் கரத்திலேயே வீழ்ந்தது! பார்வை அவள்பக்கம் திரும்பியது. அவள் விழி குளமாகி இருந்தது! வியர்வைத்துளி அவள் செவ்விதழின்மேல் அரும்புகட்டி நின்றது.

கிழவர் சோகச் சிலையாய்க் குந்தியிருந்தார். இந்த நேரத்தில் அவர்களுக்கு ஆறுதல் சொல்லாமல் எப்பொழுது சொல்வது?

"இப்பொழுது என்ன ஆகிவிட்டது! இதைப்போய்ப் பெரிது படுத்துகிறீர்களே! இந்த அளவோடு நின்றதே என்று மகிழ்ச்சி அடையுங்கள். போகப்போகச் சரியாகிவிடும். பெரிதாக எண்ணினால் துன்பம்தான் மிஞ்சும்" இந்த வார்த்தைகள் கிழவருக்குச் சிறிது ஆறுதல் அளித்திருக்கவேண்டும். பெருமூச்சு ஒன்றை விட்டுவிட்டுப் "பணத்தைக் கொடுத்துவிட்டு வாம்மா!" என்று கீழே இறங்கிக் கொண்டிருந்தார்.

நாற்காலியில் உட்கார்ந்திருந்த அவள் — பணப்பையைத் திறந்துகொண்டே எழுந்துவந்து மேஜையின் முன்னால் நின்றாள். அவள் விழியிலே ஏதோ ஒரு உணர்வு தெரிந்தது. இரண்டு பத்துரூபாய் நோட்டுகளை நீட்டிக்கொண்டே கூறினாள் "அன்று நடந்துகொண்டதற்குத் தண்டனை கிடைத்துவிட்டது. மகிழ்ச்சிதானே!" — சொல்லிவிட்டு நிற்கவில்லை! காலில் இருந்த புதிய செருப்புடன் விர்ரென்று காரில்போய் உட்கார்ந்துகொண்டாள். மீதி சில்லறையைக்கூட வாங்கிக்கொள்ளவில்லை. கார் பறந்தது!

அன்று இரவு கடை அடைத்து அறைக்குத் திரும்புகையில் எதிர் வீட்டில் விளக்கு எரிந்தது வாயிற்கதவு திறந்திருந்தது. மீதி சில்லறையுடன் எதிர்வீட்டில் நுழைந்த பொழுது — அவள் ஹாலில் உட்கார்ந்திருந்தாள். சில்லறையைக் கொடுத்துவிட்டுத் திரும்புகையில் "நில்லுங்கள்" என்று குரல்கொடுத்தாள். அந்த அன்பழைப்பு எதற்காக என்பதை அறிய அங்கேயே நின்றேன். ●

மறுமொழி

கனகு

"அங்கு போவதா வேண்டாமா, அங்கு போவதா வேண்டாமா?" என்று மனம் ஓயாமல் ஒழியாமல் கேட்டுக்கொண்டே இருந்தது. உள்ளுக்குள் பெரும்போர் நிகழ்ந்துகொண்டிருந்தது. கடைசியாக முடிவு செய்துவிட்டேன், அங்கு போவதில்லை என்று. வீட்டிலேயே இருந்துவிட்டேன். வேறெங்கும் போவதற்கும் பிடிக்கவில்லை

இரவு எட்டுமணி. மாலை ஐந்து மணிக்கு வந்தவன், எப்படித்தான் அந்த மூன்று மணி நேரத்தையும் வீணே கழித்துவிட்டிருந்தேனோ! காலத்தையும், மனிதனுடைய கோலத்தையும், அவன் முன்னேற்றத்தையும் அழித்தொழிக்கும் பெரும்படை இந்த அவல எண்ணத்தைவிடப் பிறிதொன்று இருக்கமுடியுமா? இந்த அவல எண்ணம் இலேசானதா? மனிதனின் உடலை அணு அணுவாக அரித்துச் சிதைக்கும் தொழுநோயைவிடப் பேரச்சம் நிறைந்ததாயிற்றே! அந்தத் தொழுநோய் என்னைப்பற்றிக்கொண்டுவிட்டதா? ஐயம் வேறா? இல்லையேல் அந்த மூன்று மணி நேரத்தையும் நல்ல சிந்தனை ஒன்றும் இல்லாமல் நல்ல செயல் எதுவும் இல்லாமல் வறிதே கழித்திருக்க முடியுமா? ஐயோ, இதிலிருந்து மீளவேண்டுமே! உடனடியாக மீண்டுவிடவேண்டுமே!

வெளியில் வந்து நின்றேன். நண்பர் வாயிலில் வந்து இறங்கினார். அவர் என்னைத் தேடிக் கொண்டு வருவார் என்று நான் எதிர்பார்க்கவில்லை. வியப்பால் விரிந்த கண்களோடு "வாருங்கள், வாருங்கள்!" என்றேன்.

"ஏன் வரவில்லை இன்று? விசாரித்து விட்டுப் போகத்தான் வந்தேன்"

உடனே பதில்சொல்ல முடியவில்லை. தயங்கினேன் நான்.

"உடல் நலமில்லையா?"

பிரச்சினையைத் தீர்க்க நல்ல கேள்வி கேட்டார் நண்பர்.

"ஆமாம்" என்றேன்.

"மருத்துவரைப் பார்த்தீர்களா? மருந்து சாப்பிட்டீர்களா? இப்போது எப்படி இருக்கிறது உடம்பு?"

"சற்றுப் பரவாயில்லை."

இன்னும் எத்தனை பொய்கள் சொல்ல வேண்டுமோ!

"வருகின்றீர்களா நம்வீடுவரை? —போய்விட்டு வரலாம்!"

ஏன் இந்த வேளையில் கூப்பிடுகிறார்?

"நம் வீட்டில் இன்று சிறப்பு நிகழ்ச்சியொன்று. நண்பர் நால்வர்க்கு விருந்து ஏற்பாடு செய்திருக்கிறேன். அந்த விருந்தில் உங்களைக் கேட்காமலே உங்களையும் சேர்த்திருக்கிறேன். நேற்றே பையனிடம், சொல்லச் சொன்னேன். அவன் மறந்துவிட்டிருக்கிறான். நானே சொல்லி இருக்க வேண்டும்!"

நல்லவேளை,முன்கூட்டியே உடல் நலம் இல்லை என்று சொல்லியாகிவிட்டது. அதை வைத்துக் கொண்டு மறுத்து நண்பரை அனுப்பிவிடலாம் என்று எண்ணினேன நான். எண்ணம் சொல்லாக நண்பர் காதில் விழுந்துவிட்டதோ?

"உடல் நலம் இல்லை என்றுதானே சொல்லவருகிறீர்கள்? பரவாயில்லை, சும்மா வந்துவிட்டுப் போங்கள்."

ஸ்கூட்டரைத் திருப்பினார் நண்பர். "ஏறிக்கொள்ளுங்கள்" என்றார்.

பிடிவாதம் செய்கின்றாரே! வேறு என்ன செய்வது! பின்னால் ஏறிக் கொண்டேன்.

நண்பர் அமுதனைக் கடந்த ஓராண்டுக் காலமாகத்தான் எனக்குத்தெரியும். அவருடைய ஒரே பையன் ஏழாம் வகுப்பில் படித்துக் கொண்டிருக்கிறான். அவனுக்குத் தனிப் படிப்புச் சொல்லிக்கொடுக்கும் ஆசிரியனாகத்தான் அவருடன் நான் அறிமுகமானேன். அந்த அறிமுகம் நட்பாக வளர்ச்சி கண்டது.

நண்பர் அமுதன் கலால் துறையில் பணியாற்றுகிறார். அவர் துணைவியாருக்கு அஞ்சல் துறையில் பணி. அவர்கள் வீட்டுக்கு நாள் தவறாது, கடந்த ஆறு, ஏழு மாதங்களாகச் சென்றுகொண்டி

ருக்கிறேன் விடுமுறை நாட்களில் மட்டுந்தான் நண்பரையும், அவர் தம் துணைவியாரையும் வீட்டில் பார்க்கமுடியும்.

படிப்புச் சொல்லித் தருவதற்காக முதல் நாள் அவர்கள் வீட்டுக்குப் போனபோது நண்பர் எனக்காகக் காத்துக் கொண்டிருந்தார். அவர்தம் துணைவியாரும் இருந்தனர். அன்று அவர்கள் இருவருக்கும் விடுமுறை நாள். வீட்டில் வேறு யார் யாரோ இருந்தார்கள். அவர்கள் யாரையும் நான் கவனிக்கவில்லை. கவனிக்க வேண்டுமென்று எண்ணவுமில்லை. அடுத்த நாள் அங்கு யாரும் இல்லை. பையன் மட்டும் இருந்தான்—என்னை எதிர்பார்த்துக் கொண்டு. அடுத்து அடுத்து வந்த நாட்களும் அப்படியே!

ஒரு நாள்,

முக்கியமான வரலாற்றுப்பாடம் ஒன்று சொல்லிக்கொண்டிருந்தேன். பையன் ஊன்றிக் கேட்டுக் கொண்டிருந்தான். கேட்டுக் கொண்டிருந்தவன் திடீரென்று என்னைப் பார்த்துச் சிரிக்கத் தொடங்கினான். எனக்குச் சினம் வந்துவிட்டது. "என்ன சிரிப்பு? ஏன் சிரிக்கிறாய்?" என்று அதட்டினேன். அவன் திரும்பவும் சிரித்தான். தன் பார்வையை எனக்குப் பின்னால் ஓட்டிக்கொண்டு சிரித்தான். மேலும் சினம் பொங்கிக் கொண்டுவந்தது. அவன் தலையில் ஓங்கி ஒரு குட்டுவைக்கவேண்டும் போல் தோன்றியது. எழுந்தேன் நான் — திரும்பவும் அதட்டிக் கொண்டு.

"சார், சார்" என்று இனிய குரலொன்று பின்னாலிருந்துவந்தது. சடக் என்று பின்னால் திரும்பிப் பார்த்தேன். அந்த வீட்டில் இன்னொரு உயிரும் இருப்பதை அப்போதுதான் உணர்ந்தேன். யார் அது? விந்தையால் விரிந்த கண்களோடு பையனை நோக்கினேன். அவன் இப்போது சிரிக்கவில்லை. மவுனமாக இருந்தான்.

கதவருகில் நின்ற அந்த இனிய கோலம், தன்னை எளிமையாக்கிக் காட்சி தந்துகொண்டிருந்தது. 'புனையா ஓவியம்' என்று நீங்கள் கேள்விப்பட்டிருக்கிறீர்களே, அதை நேரில் பார்த்ததுண்டா? இல்லை என்றால், அது இதோ என்னைப்போல்தான் இருக்கும்' என்று அந்த மங்கையின கண்கள் என்னைப் பார்த்து ஒரு முறை சொல்லின.

திரும்பவும் பையனை நோக்கினேன். அவன் எழுந்து நின்றுகொண்டு "சார், எங்க அத்தை அழைக்கிறாங்க. போய்க் கேட்டுட்டு வர்றேன்" என்றான். சரி என்று தலையாட்டினேன் நான்.

"பாடம் நடந்துகொண்டிருக்கும் போது இடையில்வந்து, குறுக்கிட்டுவிட்டேன். பொறுத்துக் கொள்ளவேண்டும்" என்றாள் அந்த அத்தை.

"இல்லை, இல்லை. முக்கியமான அலுவல் என்றால் கூப்பிட வேண்டுவதுதானே!" என்றேன் நான். பையன் சென்றான். அவளும் உள்ளே சென்றாள். நான் அமர்ந்தேன்.

பையன் உடனே திரும்பி வந்தான். ஒருகையில் தட்டு ஒன்றும், மறு கையில் தண்ணீர்க் குவளையும் இருந்தன. இரண்டையும் மேசை மீது வைத்தான். தட்டு நிறையப் பலகாரங்கள் இருந்தன.

"சாப்பிடுங்கள் சார்!"

பையன் களிதுளும்பச் சொன்னான். தன் ஆசிரியனை உண்ண வைப்பதில் அவனுக்குப் பெருமகிழ்ச்சிபோலும்!

"இதெல்லாம் எதற்கடா தம்பி! நான் வரும்போதுதானே சிற்றுண்டி அருந்திவிட்டுவந்தேன்?"

"இல்லை சார். சாப்பிடுங்கள் சார்"

வினயமான குரலில் வற்புறுத்தினான் அவன்.

"சாப்பிடுங்கள். பரவாயில்லை" என்று உள்ளிருந்து அந்தக் குரல் வந்தது.

திரும்பவும் ஒரு முறை அந்தப் பக்கம் பார்க்கவேண்டும்போல் தோன்றியது. நாணம் அப்பக்கம் திரும்பவொட்டாமல் தடுத்தது. அதை மீறிக்கொண்டு எப்படியோ பார்த்துவிட்டேன். அவள் கதவருகில் நின்றாள். நான் பார்ப்பதைக் கண்டதும் அப்பால் நகர்ந்தாள்.

பையன் நச்சரித்தான் "சாப்பிடுங்கள். சாப்பிடுங்கள்" என்று; நான் சாப்பிட்டேன். சாப்பிட்டுக் கொண்டிருக்கும்போது பையன் உள்ளே சென்றான் — என்னைக் கேட்காமலே. ஒரு குவளை காபியோடு திரும்பிவந்தான்.

படிப்பு முடிந்து திரும்பினேன். என்றும் இல்லாத அளவு கனம் குறைந்து தோன்றியது உடல். என்றுமில்லாத அளவு கனம் பெருகித் தோன்றியது மனம்.

மறுநாள் சற்று முன்னதாகவே சென்றேன். நான் செல்லுகையில் எப்போதும் தயாராக அமர்ந்து காத்துக்கொண்டிருப்பான் பையன். அன்று படிக்கும் இடத்தில் அவன் காணப்படவில்லை. நான் மட்டும் போய் அமர்ந்தேன். அமர்ந்தபடியே அவனை உரக்கக் கூப்பிட்டேன்.

"அவன் இன்னும் பள்ளியிலிருந்து வரவில்லையே!" என்று நேற்றுக் கேட்ட அந்தக் குரல் உள்ளிருந்து வந்தது. அந்தக் குரலைத் தொடர்ந்து நேற்றுக் கண்ட அந்தப் புனையா ஓவியம் வெளியில் வந்தது.

"ஓகோ — அப்படியானால் நான் முன்னால் வந்துவிட்டேனோ?"

"இல்லை. நேரமாகிவிட்டது. அவன் தான் இன்று காலம் தாழ்த்திவிட்டான்."

அவள் உள்ளேசென்றாள். சற்று நேரத்தில் திரும்பிவந்தாள். வரும் போது காப்பிக் குவளையுடன் வந்தாள். அதனைமேசைமீது கொண்டு வந்து வைத்தாள்.

"யாருக்கு? பையனுக்கா?" என்று வினவினேன் நான். வேண்டுமென்றே அப்படி வினவினேன்.

"பையனுக்கா! — அவன் இன்னும் வரக்கூட இல்லையே! உங்களுக்குத்தான். சாப்பிடுங்கள்!"

முதல் நாள் நாணிக் கோணிக் கொண்டு, கதவுக்கு அப்பால் நின்றவள், இன்று கலகலவென்று பேசினாள். கபடமில்லாமல் பேசினாள். நெடுநாட்கள் பழகி அறிமுகமானவள் போல் பேசினாள்.

அவளிடம் எதை எதையோ கேட்டறிய வேண்டுமென்று விரும்பினேன். எடுத்த எடுப்பில் கேள்விகளை அடுக்கிக்கொண்டு போவது நன்றாகஇராதே; பண்பாக இராதே; கேட்கவில்லை ஒன்றும். பையனைப் பற்றியே அவள் பேசினாள். நானும் அதில் ஈடுபாடு கொண்டவன் போல் அவனைப்பற்றிப் பேசினேன்.

சற்று நேரத்தில் பையன் வந்தான். நான் அமர்ந்திருப்பதைக் கண்டதும் விரைந்து ஓடிவந்தான்.

"இன்று எங்கள் பள்ளியில் ஏழைப் பிள்ளைகளுக்கு இலவசமாகப் புத்தகம், பலகை வழங்கினார்கள். அதைப் பார்த்துக்கொண்டே இருந்துவிட்டேன். அதனால் நேரமாகிவிட்டது சார்" என்றான் அவன்.

அன்று அவனிடம் சில கேள்விகள் கேட்கவேண்டும் என்றெண்ணினேன். பாடத்தைப்பற்றிய கேள்விகள் அல்ல. வேறு கேள்விகள்—அவனைப்பற்றிய கேள்விகள். அதற்கு வாய்ப்புக்கிடைக்கவில்லை. அடிக்கடி அவள் கதவருகில் வந்து நின்றுகொண்டிருந்தாள்.

பாடத்தை ஒருவாறு முடித்துவிட்டுக் கிளம்பினேன். என்றும் அவசர அவசரமாக எழுந்து, பரக்கப் பரக்கக் கிளம்பும் நான், அன்று சாவதானமாக எழுந்து, சாவதானமாகக் கிளம்பினேன். அடிக்கொருதடவை உள்ளறையை நோக்கிவிட்டுக் கிளம்பினேன். வெளியில் வந்தபிறகு, வாயில் எதிரில் சற்று நின்று நிதானித்து, எதையேனும் போட்டுவிட்டுச் செல்கிறேனோ என்று கண்களால் தேடிப்பார்த்துவிட்டுச் செல்பவன்போல் சென்றேன்.

வாரம் ஒன்று கடந்தபின் ஒரு நாள்: அங்கு நான் சென்றபோது பையன் அமர்ந்து படித்துக்கொண்டிருந்தான் வெளியே. உள்ளறையில் அரவமே இல்லை. கதவுகள் மூடி இருந்தன. "உங்கள் அத்தை உள்ளேதான் இருக்கிறார்களா?" என்று நான் தணிவாக வினவினேன்.

"அத்தை எங்கள் சித்தி வீட்டுக்குப் போயிருக்கிறாங்க சார்."

"எந்த ஊருக்கு?"

"இங்கேதான் சார். எங்கபள்ளிக்கூடத்துக்குப்பக்கத்திலே வண்டிப்பேட்டை இருக்குதே, தெரியுங்களா? அந்த வண்டிப்பேட்டைக்கு அடுத்த தெருவிலேதான் எங்க சித்தி வீடு சார்"

"ஆமா, உங்க அத்தை ஊர் எது?"

"அத்தை ஊர் இல்லீங்க சார். எல்லாம் ஒரே ஊர்தான். போன வருசத்துக்கு முதல் வருசந்தான் எங்க அத்தைக்குக் கலியாணம் ஆச்சுது சார். எங்க மாமா ரொம்ப நல்லவருங்க சார். ஏரோப்பிளேன்லே வேலை செய்தாருங்க சார், பைலட் வேலை. ஒருநாள் திடீர்னு தந்தி வந்ததுங்க சார்,—எங்க மாமா ஓட்டிக்கிட்டுப்போன ஏரோப்பிளேன் மலையிலே மோதிக் கீழே விழுந்து எரிந்து போயிட்டதுன்னு. எங்க மாமாவும் செத்துப் போயிட்டாரு சார். அப்போ சார், எங்க அப்பாவும், அத்தையும் மூணு நாள் காபிகூடக் குடிக்கலீங்க சார். அழுதுகிட்டே இருந்தாங்க சார். சார்—நான்கூட அழுதேன் சார்"

"உன் மாமா எப்போது இறந்து போனார்?"

"அதுவா சார்?—போன வருசம் கோடை விடுமுறை விட்டாங்களே, அப்போ சார்."

"உன் அத்தை பெயர் என்ன?"

"எங்க அத்தை பேரும், எங்க அப்பா பேரும் ஒரே பேர்தான் சார். எங்க அப்பா பேர் அமுதன். எங்க அத்தை பேர் அமுதா!"

"டேய், திருடா, அப்பா பேர், அத்தை பேர் எல்லாம் சொல்லிக்கிட்டு இருக்கிறியா!" என்று சிரித்தபடி கூறிக்கொண்டு உள்ளே நுழைந்தாள் பையனின் அன்னை. அவளைத் தொடர்ந்து அமுதனும், அமுதாவும் வந்தார்கள். வீடு கலகலப்பாயிற்று. பையன் பேச்சை நிறுத்திக்கொண்டு படிக்கத் தொடங்கினான்.

ஒரு நாள் கடைத் தெருவில் அமுதாவைக் கண்டேன். மிதி வண்டியில் சென்றுகொண்டிருந்த நான் சட்டென்று, என்னையறியாமலே அவளருகிற்போய் இறங்கினேன்.

"எங்கே சார் போகிறீர்கள்?" என்றாள் அவள்.

"அந்தக் கேள்வியை நான் கேட்பதற்குள் நீங்கள் கேட்டுவிட்டீர்களே!" என்று நான் புன்னகைத்தேன்.

"என் தோழி ஒருத்திக்குத் திருமணம். அவளுக்குப் பரிசுப் பொருள் ஒன்று வாங்கலாமென்று வந்தேன்."

"என்ன பொருள் வாங்கப்போகிறீர்கள்?"

"அதைத்தான் இன்னும் முடிவு பண்ணவில்லை."

"வெளியில் நின்றுகொண்டு, என்ன பொருள் வாங்கலாமென்று யோசித்துக்கொண்டு நின்றால், யோசிப்பதற்குத்தான் நேரம் சரியாக இருக்கும். கடைக்குள் நுழைந்து பாருங்கள். அப்போதுதான் ஏதாவதொன்று கண்ணில் தட்டுப்பட்டு மனத்தில் பிடிபடும்."

"நீங்களும் வாருங்களேன்!"

அவள் முன்னால் நடந்தாள். கடைக்குள் நுழைந்தாள். நான் பின்னால் சென்றேன்.

பரிசளிப்பதற்கான பொருள் ஒன்று வாங்கவேண்டுமென்று சொன்னதும், கடைக்காரர் விதவிதமான பொருள்களைக் கொண்டு வந்து மேசைமீது பரப்பி வைத்தார். ஆடம்பரப் பைகள், வினோதமான ஆழிகள்,—சோப்பு, சீப்பு, சிறு கண்ணாடி, கண்மை, உதட்டுச் சாயம் முதலியன அடங்கிய அழகான சிறு பெட்டிகள், எழுதுகோல், தாள், கூடுகள் அடங்கிய பாக்கெட்டுகள், பல வகைப்பட்ட அலங்கார ஊசிகள் அடங்கிய செட்டுகள், சிறிய பூச்சட்டிகள் ஆகியன அவற்றுள் அடங்கியிருந்தன. எல்லாவற்றையும் ஒதுக்கி வைத்துவிட்டுச் சிறந்த வேலைப்பாடுகள் அமைந்த, பொன் மூலாம் பூசிய பூச்சட்டி ஒன்றைத் தேர்ந்தெடுத்தாள் அமுதா. எனக்கும் அதுதான் பிடித்திருந்தது. ஐம்பது ரூபாய் விலை சொன்னார் கடைக்காரர். அதை வாங்கிக் கொண்டாள் அவள். வெளியேறினோம் இருவரும்.

வெளியில் வண்டிக்காகச் சிறிது நேரம் காத்து நின்றோம், வண்டி விரைவில் கிடைப்பதாகத் தோன்றவில்லை.

"நடந்தே செல்கிறேன்" என்றபடி நடக்க முனைந்தாள் அவள்.

"அரைக்கல் தொலைவு நடக்க வேண்டுமே!"

"அரைக்கல் என்ன! ஆறுகல் கூட நடப்பேன்" என்றாள் அவள். இன்னும், "உங்களுக்கு முக்கியமான வேறு அலுவல் இருக்குமே! நீங்கள் மிதிவண்டியில் போய்விடுங்கள்" என்று கூறினாள்.

"இல்லை, எனக்கு வேறு அலுவல் ஒன்றும் இல்லை. நேரே உங்கள் வீட்டுக்குப் போகவேண்டியதுதான்."

அவள் ஒன்றும் பேசவில்லை. மவுனமாக நடந்தாள்.

வழியில் புத்தகக் கடை ஒன்று தென்பட்டது. அங்கே வார இதழ் ஒன்று வாங்கினாள் அவள். அந்த இதழின் மேலட்டையில் அழகான படம் ஒன்று. அந்தப் படத்தை ஒரு முறை அவள் பார்த்துவிட்டு என்னை ஏறிட்டு நோக்கினாள். நானும் படத்தை நோக்கினேன். அதில் ஆடவன் ஒருவன் நடந்தபடி மிதிவண்டியைத் தள்ளிக்கொண்டு போகிறான். பின்னால் மங்கை ஒருத்தி அமர்ந்திருக்கிறாள். அந்த வார இதழை அவள் புரட்டிப் பார்க்கவில்லை. மடக்கி வைத்துக் கொண்டாள். இருவரும் மௌனமாக நடந்தோம்.

என் மனத்தில் என்னென்னவோ எண்ண அலைகள் வந்

பதிவு எண். எம். 4642

தொலைபேசி எண்.... } அலுவலகம் 15 இல்லம் ...118

வந்து தலைகாட்டிக் கொண்டிருந்தன. ஒரு சமயம் பொருள் இல்லாத சோர்வின் வாய்ப்பட்டது.

அவளிடம் நான் எதையாவது சொல்லவேண்டுமென்று எண்ணினேன். அவள் மௌனமாக நடந்தாள். அந்த மௌனம் என் எண்ணத்தைப் பின்னுக்கு இழுத்தது. இப்படியே அவர்கள் வீட்டையும் அடைந்தோம்.

நாள்தோறும், நாள்தோறும் என் ஆசை வேகம் காய்ச்சல் வேகமாகப் பெருகிக்கொண்டு வந்தது. பொழுதெல்லாம் அமுதாவைப் பற்றியே சிந்திக்கத் தொடங்கினேன். அவர்கள் வீட்டுக்கு நான் சென்றபோதெல்லாம், அவள் என்னுடன் நெருக்கமாகப் பழகினாள். ஒட்டுறவோடு பேசினாள். ஆயினும், அந்தப் பேச்சில் என் மனம் வேண்டும் பொருளினைக் காண முடியவில்லை; குறிப்பினை அறிய முடியவில்லை. அவள் பேச்சின் ஒவ்வொரு பாங்கும் கள்ளங் கபடமற்ற சிறு குழந்தைகளை நினைவுபடுத்திற்று. உள்ளும், புறமும் ஒன்றான பெரியோர் பேசும் கனிவினைக் காட்டிற்று. ஒவ்வொரு நாளும் அவளிடத்தில் நான் வேண்டும் பொருளினையும், குறிப்பினையும் தேடிக்கொண்டே இருந்தேன். இடையில் என் மனத்திலொரு ஐயம்.

பெண்களின் மனம் ஆழங்காண முடியாதது என்கிறார்களே! பால் உணர்வு தொடர்புகொண்ட மட்டில் பெண்களின் பேச்சே புதிர் நிறைந்ததாக இருக்கும்; உள்ளத்துள் ஒன்றானால், சொல்வது வேறு ஒன்றாக இருக்கும் என்றெல்லாம் விளம்புகிறார்களே! அமுதாவின் பேச்சும் ஏன அப்படி இருக்கக் கூடாது? என்னிடம் அவளுக்குப் பற்று விழுந்துவிட்ட முனைவினையால்தான் இப்படிக் குழந்தைபோல் குழைந்து, குழைந்து பேசுகின்றாளோ! எதற்கும் இதைச் சோதித்துப்பார்த்துவிட்டால் என்ன? எப்படிச் சோதிப்பது? சிந்தித்தேன் நெடுநேரம். சரி. அதுதான் சரியான வழி. கடிதத்தின் மூலமாக அவளைக் கேட்டுவிடலாம். முடிவுக்கு வந்தேன். எழுதினேன்:

"அமுதா,

உங்களை எப்படி விளிப்பது என்று தோன்றவில்லை. என் உள்ளக்கிடக்கையை எப்படி வெளியிடுவது என்றும் விளங்கவில்லை. நீண்ட நாள் இந்த மனப்போராட்டம் என்னைத் துன்பச் சகதியிற் போட்டுத் துவைத்துக் கொண்டிருக்கிறது. என்னையறியாமல் எவ்வாறோ நீங்கள் என் உள்ளத்துள் வாழ வந்த 'தெய்வம்' ஆகிவிட்டீர்கள். உங்களை என்னால் இனி ஒரு கணமும் மறந்திருக்க முடியாது. உங்களை என் இன்னுயிர்த் துணையாக எடுத்துக்கொள்ள விட்டுவிடுங்கள் என்னை. எழுத விழைகிறேன் ஓராயிரம் செய்திகள். ஏனோ எழுத முடியவில்லை. மறுமொழி தாருங்கள். காத்திருக்கிறேன்.

இனியன்"

அமுதா உள்ளே இருந்தாள். சமயம் பார்த்துக் கடிதத்தைப் பையன் மூலம் கொடுத்தனுப்பினேன். நெஞ்சு அடித்துக்கொண்டது நிலைமை எப்படி மாறுமோ என்று. ஏனோ அஞ்சினேன்.

பையன் வந்தான்—'கொடுத்துவிட்டேன் கடிதத்தை' என்று சொல்லிக்கொண்டு முன்னால் வந்தமர்ந்தான். பாடத்தில் அவ்வேளை எனக்கு மனம் செல்லுமா! பையனிடம் எதையோ எழுதச் சொல்லிவிட்டுக் குத்துக்கல்போல் அமர்ந்திருந்தேன். அடிக்கொரு தடவை கடிகாரத்தைப் பார்த்துக் கொண்டேன். நேரம் சென்று கொண்டிருந்தது. அமுதா வெளியில் வரவில்லை. அன்று அரை மணி நேரம் அதிகமாகவே அங்கு காத்திருந்தேன். உள்ளறையிலிருந்து சிற்றரவம்கூடக் கேட்கவில்லை. காலந் தாழத் தாழ என் உள்ளத்தில் சுமை ஏறிக்கொண்டு வந்தது. அரைமணி நேரம் அதிகமாக உட்கார்ந்திருந்துவிட்ட பையன், எழுந்து ஓடி ஆடுதற்குத் துடித்தான், வேறு வழியில்லை. எழவேண்டியதுதான் நானும். எழுந்தேன். கிளம்பினேன். வாயிற்படியைத் தாண்டினேன். உள்ளே சென்ற பையன் வெளியே ஓடி வந்தான். "சார், சார், நில்லுங்கள். எங்கள் அத்தை அழைக்கிறார்கள்" என்றான்.

எனக்குத் திக் என்றது. உள்ளே செல்லும் துணிச்சல் இல்லை. வெளியில் நின்றேன். அவள் வந்தாள் வாயிலுக்கு.

"சார், வாருங்கள் இங்கே!"

அவள் அழைத்த விதம் புது விதம். மரியாதைக்கு இறக்கை கட்டிவிடும் தோரணை அவள் வார்த்தையில் ஒலித்தது. என் உடல் குன்றத் தொடங்கியது. மெல்ல அவளருகிற் சென்றேன். என் கடிதம் அவள் கையிலிருந்தது.

"இதை நீங்கள்தான் எழுதினீர்களா?"

'ஆமாம்' தலையை ஆட்டினேன்; ஒலி வரவில்லை.

"இவ்வளவு நாள் உங்களோடு நான் எப்படிப் பழகினேன் தெரியுமா? — ஒரு நல்லாசிரியன் என்ற மதிப்புக் கொடுத்துப் பழகினேன். தெரிந்து கொள்ளுங்கள். விதவை மணம் கூடாது என்ற கட்டாயம்— கட்டுப்பாடு — கண்மூடித்தனம், இவை ஒழியா முன்பு — ஒழிக்கும் துணிவு ஏற்படா முன்பு—உங்களுக்கு, உலக நடப்பு, அதிலும் விதவைகளை இந்த உலகம் எப்படி எப்படி எல்லாம் நடத்துகிறது, மதிக்கிறது என்பது தெரியும்வரை இதுதான் மறுமொழி—உணர்ந்து கொள்ளுங்கள், அறிவோடு நடந்துகொள்ளுங்கள்."

நான் எழுதிய கடிதத்தைச் சுக்கல் சுக்கலாகக் கிழித்து, என் முகத்தில் எறிவதுபோல் விட்டெறிந்தாள் அவள். படீரென்று கதவைச் சாத்திக்கொண்டு உள்ளே சென்றாள், நல்லவேளை, முகத்தில் அறையவில்லை.

திரும்பவும் எந்த முகத்தை வைத்துக்கொண்டு அங்கே படிப்புச் சொல்லிக் கொடுக்கப் போவது? எனினும், அமுதன் என்னை இழுத்துக்கொண்டு போகிறார். நான் அங்கு போகும் வேளையில் அவள் கண்ணிற் படாமலிருந்தால், அதுவே போதும்.

★

காஞ்சிபுரம், 86, திருக்கச்சிநம்பி தெரு, "திராவிட நாடு" அச்சகத்தில்
ஆசிரியர் (உரிமையாளர்) சி. என். அண்ணாதுரையால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.